# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 17 இதழ் - 11 நவம்பர் - 2004



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம்-638 701.
தமிழ்நாடு, இந்தியா

✆ 04257 - 230030 Cell : 98427 - 30382 , 98428 - 30382
E-mail : kangayamcofc@eth.net

# BIBLE MEDITATION

## TV PROGRAM




## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........................................ 1
2. பாதுகாப்பான வழிகாட்டியாக மனசாட்சியை நாம் ஏற்றுக்கொள்ளாதது ஏன்? .................... 10
3. பெண்கள் பகுதி ........................................ 14
4. வாலிபர் பகுதி ........................................ 17
5. சிறுவர் பகுதி ........................................ 20
6. விசுவாசத்தின் அடிப்படைகள் .................... 23
7. பரமபிதாவின் சித்தத்தின்படி செய்யுங்கள் .......... 28

# THIRUMARAI AASAAN

**Published by Church of Christ**

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 17 November - 2004 Issue - 11**


ஆசிரியர் உரை

## நேபோ மலையிலிருந்து ..

பரலோகத்தின் தேவனால், மனிதனுக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த வேதாகமத்தில், மலைகள் பல தேவனால் பயன்படுத்தப்பட்டிருகிறதென்பது நம் எல்லோருக்குமே தெரியும். அந்த மலைகளை நாம் ஏறெடுத்துப்பார்த்தால், அவைகளிலிருந்து, நாம் நமக்காகச் சில பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியுமென்பது புரியும். உதாரணமாக, மோரியா மலையிலிருந்து (ஆதி. 22:1-13) நாம் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள முடியும். ஒலிவ மலையிலிருந்து (அப். 1:4-12) நாம் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள முடியும். மறுரூப மலை என்றழைக்கப்படும் எர்மோனிலிருந்து (மத். 17 அதி) கிறிஸ்துவின் அதிகாரத்தை அறிந்து கொள்ள முடியும். இன்னும் சீயோன் மலையிலிருந்து ஆசீர்வாதத்தை அடைய முடியும். இவை தவிர, சீனாய் மலையும், கலிலேயாக் கடற்கரையிலிருந்து கூப்பிடு தூரத்திலிருந்த, சுமார் அறுபது அடி உயரம் கொண்ட தாபோர் மலையும், தேவச் சட்டங்களை வெளிப்படுத்தும் இடங்களாக தேவனால் பயன்படுத்தப்பட்டுள்ள தென்பதும் விளங்கும்.

இந்த மலைகளின் வரிசையில் நாம் இன்னுமொரு மலையையும் சேர்க்கமுடியும். அது தேவனுடைய கண்டிப்புக்கும், கறாருக்கும் அடையாளமாகத் திகழும் **நேபோ மலை.** இதற்கு பிஸ்கா என்ற வேறொரு பெயரும் உண்டு. இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 4000 அடி உயரம்

கொண்டது. பெலஸ்தீனா தேசத்தை இரண்டாகப் பிரிக்கும் யோர்தான் நதிக்குக் கிழக்கே இம்மலை அமைந்திருந்தது. இதன் உச்சியில் ஏறி நின்று, யூதாவின் மலைநாட்டை, ஒருவன் நன்றாகப் பார்க்க முடியும். முற்பிதாக்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட புண்ணிய பூமியை மோசேக்குக் காண்பிக்கும்படி தேவன் இந்த மலையைத்தான் தெரிந்து கொண்டார். கன்மலையைப் பார்த்து பேசு என்ற தேவ கட்டளைக்கு மாறாக அதை **அடித்ததினிமித்தம் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசம் "மோசேக்கு தடைசெய்யப்பட்ட தேசமாக"** மாறிற்று (எண். 20:9-11).

தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையாயிருந்தவனுக்கு, இப்படியொரு நிலையா என்று இப்பகுதியைப் படிக்கும்போதெல்லாம், அநேகராகிய உங்களைப் போலவே எனக்கும் மனம் பதைக்கும். மோசேக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையின் தன்மை மிகக்கடுமையாக இருப்பதால், ஒருவேளை தேவன் தவறு செய்துவிட்டாரோ என்று கூட எண்ணத் தோன்றும். ஆனால், தேவன் நீதிபரர். நான்காயிரம் ஆண்டு கால சரித்திரத்தை உள்ளடக்கிய வேதாகமத்தில், ஓரிடத்தில் கூட அவர் தவறிழைத்ததாக நாம் காண முடியாது. ஆகவே அவருடைய நீதியில் இங்கும் குறை இருந்திருக்க முடியாது. அப்படியானால், இப்பகுதியைப் படிக்கும்போது, நமக்கு நேரும் நெருடலுக்கு அடிப்படை என்ன என்ற கேள்வி எழுகிறது. நம்முடைய அறிவு குறைவுள்ளதாயிருக்கிறபடியாலும், மனிதர்களாகிய நாம் முகத்தைப் பார்த்து தீர்மானிக்கும் பழக்கத்திற்கு நம்மையும் அறியாமல் அடிமைப்பட்டு விட்டதாலும், மோசே தன்னுடைய தியாகச் செயல்களால் நம்முடைய நெஞ்சில் நெடிதுயர்ந்து நிற்பதாலும், இந்த மோசேக்கு இப்படியொரு தண்டனையை திடீரென வேதாகமத்தில் நாம் காணும்போது, அதை உடனடியாக ஏற்று அங்கீகரிக்க நம்முடைய பாரபட்ச மனது மறுத்துவிடுகிறது. **ஐயோ பாவம் மோசே** என்று தான் எண்ணத் தோன்றுகிறதேயொழிய **தவறுக்குத் தண்டனை** என்று எண்ணமுடியவில்லை. இதற்கு காரணம், அந்தத் தண்டனை யிலடங்கியிருக்கும் **தேவநீதி** நம்முடைய அறிவுக்கு எட்டாதது தான். ஒருவனுடைய அறிவுக்கு, ஒரு காரியம் எட்டவில்லையென்பதற்காகவே, ஒரு காரியம் தவறாகிவிடாது அப்படித்தானே!.

நம்முடைய, உடனடி அறிவுக்கு எட்டாத இதைப்போன்றதொரு சம்பவம் புதிய ஏற்பாட்டிலும் உண்டு. நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்து, பிறவிக்குருடனை சுகமாக்கின சம்பவம் அது. (யோவான் 9:6,7). பிறவிக் குருடனாயிருந்து ஒரு எட்டு எடுத்து வைப்பதற்குக் கூட தட்டுத் தடுமாறும் ஒருவனுடைய முகத்தில், உமிழ்நீரினால் உண்டாக்கிய சேற்றைப்பூசி, கொஞ்ச தூரத்திலுள்ள சீலோவாம் குளத்தில் போய்க் கழுவு என்று இயேசு கட்டளையிடுகிறார். இங்கும் கூட நமதாண்டவரின் செயல்,

நம்முடைய அறிவோடு சண்டையிடுகிறதாகவே இருக்கும். அதற்காக, அவரின் செயலை நாம் குற்றப்படுத்திவிட முடியுமா என்ன? நிச்சயமாக முடியாது. ஏனெனில் **அவர் பாவஞ் செய்யவில்லை அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை என்று** (1பேதுரு 1:22) பரிசுத்த ஆவியானவர், பேதுருவைக் கொண்டு திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

சரி, மோசேக்குத் தரப்பட்ட **அனுமதி**மறுப்பு அப்பகுதியை வாசிக்கின்ற நமக்கே கணக்கில்லா கவலையைக் கொடுக்கிறதென்றால், அது மோசேக்கு எப்படியிருந்திருக்குமென்று அப்படியே கொஞ்சம் கற்பனை செய்து பாருங்களே. வணங்காக் கழுத்துள்ள ஜனங்களை வழிநடத்துவதற்கு அவன்பட்ட பாடுகள் என்ன கொஞ்சமா, நஞ்சமா? தன்னுடைய நாற்பதாண்டு கால அனுபவங்களையெல்லாம் தன் எண்ணங்களிலே தேக்கி, நெஞ்சிலே சுமந்து, அய்யகோ, இப்படியாகிவிட்டதே என்று எண்ணி கலங்கி, சோகமே உருவெடுத்து, அந்த நேபோ மலையிலே நின்ற காட்சியை வர்ணிக்க என்னிடத்தில் வார்த்தைகள் இல்லை. அதை உங்கள் கற்பனைக்கே விட்டு விடுகிறேன்.

கானானுக்குள் கால் வைக்கும் உரிமையை மோசேயிடமிருந்து தேவன் பறித்திருந்தாலும், அதை அவன் தன் கண்களால் காண இரக்கங்காட்டினார். **அப்பொழுது கர்த்தர் அவனுக்கு, தாண் மட்டுமுள்ள கீலேயாத் தேசம் அனைத்தையும் நப்தலி தேசம் அனைத்தையும், எப்பிராயீம், மனாசே என்பவர்களின் தேசத்தையும், கடைசிச் சமுத்திரம் வரைக்குமுள்ள பேரீச்சை மரங்களின் பட்டணம் என்னும் ஊர் முதற்கொண்டு, எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமனான பூமியையும் காண்பித்தார். அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி; நான் உங்கள் சந்ததிக்குக் கொடுப்பேன் என்று ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் ஆணையிட்ட தேசம் இதுதான். இதை உன் கண் காணும்படி செய்தேன். ஆனாலும் நீ அவ்விடத்திற்குக் கடந்து போவதில்லை என்றார்.** (உபா. 34:1-4).

அங்கே தேவன் நேபோ மலையிலிருந்து, பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்தை தொய்ந்து போன நிலையிலிருந்த மோசேக்குக் காட்டினபோது ஒருவேளை அவன் தன் புறக்கண்களால் அந்த அழகிய கானானைக் கண்டு சற்று ஆறுதலடைந்திருந்தாலும், அழுது வடிந்து கொண்டிருக்கும் தன் அகக்கண்களால், வேறு சிலவற்றையும் அவன் கண்டிருக்க வாய்ப்புள்ளதால், அவைகள் எவைகளாக இருக்கக்கூடும் என்று நாம் கண்டு, அதிலிருந்து சில பாடங்களை நமக்காகக் கற்றுக்கொள்ள முயற்சிப்போம்.

## I கீழ்ப்படியாமைக்கான விலையை மோசே கண்டிருப்பான்

முதலாவதாக, நேபோ மலையிலிருந்து மோசே தன்னுடைய அகக்கண்களால் தான் கீழ்ப்படியாமல் போன சூழலையும், அதற்காகத் தான் கொடுக்க நேர்ந்த விலையையும் கண்டிருப்பான்.

நன்றிகெட்ட இஸ்ரவேல் ஜனங்கள், தங்களுடைய யாத்திரையில், ஒரு சமயம், சீன் வனாந்திரத்தின் காதேசிலே தங்கியிருந்தார்கள். அங்கே தண்ணீர் இல்லாதபடியால், வழக்கம்போல, ஜனங்கள் மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக கூட்டங்கூடினார்கள். வாக்குவாதம் பண்ணி, கலகம் செய்தார்கள். அப்பொழுது, கர்த்தர் மோசேயை நோக்கி, **நீ கோலை எடுத்துக்கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும், சபையாரை கூடிவரச் செய்து அவர்கள் கண்களுக்கு முன்பாக, கன்மலையைப் பார்த்து பேசுங்கள்....."** என்றார். ஆனால், மோசேயோ, ஜனங்களை நோக்கி **கலகக்காரரே கேளுங்கள் என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையை தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்.** (எண். 20:1-10).

இங்கே, மோசே ஜனங்களை **கலகக்காரரே** என்று கூறினான். ஆனால், தன்னுடைய செயலால், அவன் தானே ஒரு கலகக்காரனாக மாறிவிட்டான். அங்கே தேவன், அவர்கள் இருவரையும் **கலகக்காரர்கள்** என்று நேரிடையாக குற்றஞ்சாட்டாவிட்டாலும், அதற்கு சற்றும் குறையாத பொருள் தரும் **அவிசுவாசிகள்** என்று அழைத்து தன்னுடைய அதிருப்தியையும், ஆதங்கத்தையும், கோபத்தையும் வெளிப்படுத்தினார். ஆம், **நீங்கள் என்னை விசுவாசியாமற்போனபடியினாலே, இந்த சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக் கொண்டுபோவதில்லை** என்றார். (20:12).

மோசேயின் இச்செயல், சங்கீதப் புத்தகத்தில் இவ்விதம் இடம்பெற்றுள்ளது. **மேரிபாவின் தண்ணீர்களிடத்திலும் அவருக்கு கடுங்கோபம் மூட்டினார்கள்; அவர்கள் நிமித்தம் மோசேக்கு பொல்லாப்பு வந்தது; அவர்கள் அவன் ஆவியை விசனப்படுத்தினதினாலே, தன் உதடுகளால் பதறிப் பேசினான்** (சங். 106:31,32). இங்கே மோசேக்கு நேர்ந்த பொல்லாப்பு, மோசேயின் பொல்லாப்பு என்று சொல்கிறது. ஆயினும், பொல்லாப்புக்கான காரணம் எதுவாக இருந்தாலும் அந்த பொல்லாப்பை, தேவன், மோசேயின் பாவமாகவே எடுத்துக்கொண்டார். ஆகவேதான், அவனை அவிசுவாசி என்று தீர்த்து, தண்டனையும் கொடுத்தார்.

அருமையானவர்களே! இங்கே நாம் கவனிக்கவேண்டிய இரண்டு முக்கியமான பாடங்கள் இருக்கிறது. ஒன்று, கீழ்ப்படியாமைக்கு ஒருவன் மிகப்பெரிய விலையைக் கொடுக்க வேண்டுமென்பது. இரண்டு, நம்முடைய கீழ்ப்படியாமைக்கு, மற்றவர்கள் காரணமாக இருந்தாலும், தண்டனையை நாம் தான் அனுபவிக்க வேண்டுமென்பது.

ஆம், அந்த நேபோ மலையிலே, அவன் நின்ற பொழுது, தேவனுடைய வீட்டிலே எங்கும் உண்மையுள்ளவனாக இருந்தும், தான் செய்த அந்த ஒரே தவறுக்காக, ஒரு பெரிய விலையை கொடுக்க வேண்டியிருந்தது. அப்பொழுது, ஜனங்கள் செய்த கலகமும், அதினிமித்தம் அவன் செயல்பட நேர்ந்த சூழலும், அவன் கண்களுக்கு முன்பாக வந்து, அவனை வாட்டி வதைத்திருக்கும்.

அன்பானவர்களே, ஒருவேளை, இந்த மோசேயைப் போல, நம்முடைய வாழ்க்கையில் சில நேரங்களில் **பிறர் நிமித்தம்** பாவம் செய்கிறவர்களாக இருக்கிறோமா என்று நம்மை நாமே பரிசோதித்து பார்ப்போம். நம்முடைய ஆன்மீக வாழ்க்கையில், இந்த மோசே செய்ததைப்போல, ஒருவேளை நம்முடைய பெற்றோர்களினிமித்தம், நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமலிருக்கக் கூடும் அல்லது நம்முடைய வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில், தனி ஒருவரிடத்திலோ அல்லது ஒரு ஸ்தாபனத்திடமிருந்தோ பெற்றுக்கொண்ட சரீர நன்மைகளினிமித்தம் நாம் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமலிருக்கக்கூடும். அல்லது நமக்கு இதுகாறும் உபதேசிக்கப்பட்ட உபதேசங்களினிமித்தம் அல்லது நாம் சார்ந்திருக்கும் ஒரு சபையினுடைய கொள்கைகளினிமித்தம் நாம் தேவனுடைய வார்த்தைக்கு முழுமையாகக் கீழ்ப்படியாமலிருக்கக்கூடும். ஆனால், இங்கே ஒன்றை தெளிவாக தெரிந்துகொள்ளுங்கள். நம்முடைய நிர்பந்த நிமித்தங்கள், நமக்கு கிடைக்கும் தண்டனையிலிருந்து நம்மைக் காப்பாற்றாது. நம்முடைய **நிமித்தங்கள்** எதுவாயிருந்தாலும், அதை செய்கிறவர்கள் நாமாக இருக்கிறபடியால், நாம் தண்டனையை அடைந்தே தீருவோம். மோசேயின் நேபோ மலைக் காட்சி இதற்கு மிகச் சிறந்த சான்றாக இருக்கிறது.

ஆகையால், நாம் ஒவ்வொருவரும், நம்முடைய ஆன்மீக வாழ்க்கையின் காரியங்கள் ஒவ்வொன்றும், தேவனுடைய வார்த்தைகளின்படி இருக்கிறதா என்று சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொண்டு வாழ்வோம்.

## II பாவத்தின் கொடுமையை மோசே கண்டிருப்பான்

இரண்டாவதாக, இந்த மோசே, நோபோ மலையின் உச்சியிலிருந்து தன்னுடைய அகக்கண்களால், பாவத்தின் கொடுமையையும், அதன் பயங்கரத்தையும் கண்டிருப்பான்.

ஆம், தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக, அவன் செய்த கீழ்ப்படியாமை என்ற பாவம், காலமெல்லாம் அவன் எதற்காகப் பாடுபட்டானோ அதை அடையாமல் தடுத்துவிட்டது. ஒருவேளை பரமக் கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியம் அவனுக்குக் கடைசி நாளில் கொடுக்கப்படும் என்பது வேறு விஷயம். (மத். 17; எபி. 11 அதி). ஆனாலும், இங்கே அவனுக்கு நேர்ந்த **கொடுமையின் அளவு** மிகப்பெரியது. இந்தக் கொடுமைக்குக் காரணம் பாவமே. தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக ஒருவன் செயல்பட ஆரம்பித்துவிட்டால், அது ஒருவனை எங்கே கொண்டு போய் நிறுத்தும் என்பதற்கு, நேபோவின் மோசே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

தேவனுக்குப் பயப்படும் வாழ்க்கை வாழ்ந்த மோசேயின் வாழ்க்கையிலேயே பாவம் விளையாடி, அவன் அடைய வேண்டிய நன்மையைக் கெடுத்து, அவனைப் பாழ்படுத்தியிருக்கிறதென்றால், அந்தப் பாவம் உங்களையும், என்னையும் சும்மா விட்டுவிடும் என்று நினைக்கிறீர்களா? சொல்லுங்கள். பாவம் ஒருவனைத் தாக்கும்போது, அவன் மனோ ரீதியாகப் பாதிக்கப்பட்டு தன்னுடைய விருப்பத்திற்கு மாறாக, காரியங்களைச் செய்கிறவனாக மாறிவிடுகிறான். தன்னுடைய நிலையிலே ஒரு தடுமாற்றம் அவனுக்கு ஏற்படுகிறது. இந்நிலை பற்றி, ஏசாயா தீர்க்கன் இவ்விதம் கூறுகிறான். **"துன்மார்க்கரோ கொந்தளிக்கும் கடலைப்போலிருக்கிறார்கள்; அது அமர்ந்திருக்கக் கூடாமல் அதின் ஜலங்கள் சேற்றையும், அழுக்கையும் கரையில் ஒதுக்குகிறது. துன்மார்க்கருக்குச் சமாதானம் இல்லையென்று என் தேவன் சொல்லுகிறார்."** (ஏசா. 57:20) இதிலிருந்து, பாவம் ஒருவனை எப்படியெல்லாம் ஆட்டிப்படைக்க முடியுமென்பது தெளிவாகிறது.

அருமையானவர்களே, பாவத்தைக் குறித்த தம்முடைய நிலை எப்படியுள்ளது அதன் தன்மையையும், கொடுமையையும் நாம் உணர்ந்துள்ளோமா? தேவனுக்குப் பயந்து வாழ்ந்த மோசே தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாகச் செயல்பட்டு, பாலும், தேனும் ஓடுகின்ற கானானை இழந்துபோனது போல, நம்முடைய ஆவிக்குரிய வாழ்வில், தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாக வாழ்ந்து பரம கானானை இழந்து போகப்போகிறோமா? எப்படி மோசே, தேவனுடைய வார்த்தைக்குத் தன்னை **"முழுமையாக"** ஒப்புக்கொடுக்கத் தவறியபோது, தீமை அவனைத் தொற்றிக் கொண்டதோ, அதுபோலவே ஆவிக்குரிய வாழ்வில் தேவனுக்குக் கீழ்படியாமல் அவருடைய உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் ஒருவன் வாழும்போது ஆவிக்குரிய தீமைகள் அவனைத் தொற்றிக்கொள்ளும், மோசே, தேவனுடைய

வார்த்தைக்கு விரோதமாகச் செயல்பட்டது போலவே, அவன் தன்னுடைய வாழ்விலும், தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாகச் செயல்பட ஆரம்பித்து விடுவான். இறுதியில், மோசே, சரீரப்பிரகாரமான கானானை இழந்தது போல, அவனும் ஆவிக்குரிய பரம கானானை இழந்து போகும் நிலை ஏற்படும்.

தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய மறுப்பதினால் உண்டாகும் பல தீமைகள், ஆவிக்குரிய உலகில் தலைவிரித்தாடுகிறதை நாம் கண்கூடாகப் பார்த்துக்கொண்டு தான் உள்ளோம். ஆம், விக்கிரக வணக்கம், தேர் இழுத்துப் பண்டிகை கொண்டாடுதல், ஏழாம் நாள் உபதேசம், அந்நிய பாஷை குழப்பம் அற்புத அடையாளங்கள் என்ற ஏமாற்றம், நீண்ட அங்கிகளை அணிந்து வலம் வருதல், கிறிஸ்துவின் பெயரால் நாட்களை விசேஷித்துக் கொள்ளுதல், ஒன்றான மெய்ச் சபைக்கு விரோதமான உபதேசங்கள், இரட்சிக்கப்படுவதற்கான போலி வழிமுறைகள் இரண்டாம் வருகைக்கு நாள் குறித்தல் என்று இப்பட்டியலை நீட்டித்துக்கொண்டு போகமுடியும். இவைகளனைத்தும், தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனதால் ஏற்பட்ட தீமைகள் என்பதை நீங்கள் மறந்து விடவேண்டாம். எப்படி மோசே தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மறுத்ததால், சரீரக் கானானை இழந்தானோ அது போலவே, தேவனுடைய வார்த்தைகளுக்கு முற்றிலும் விரோதமான மேற்சொன்ன காரியங்களிலிருந்து, நீங்கள் உங்களை உடனடியாக விடுவித்துக் கொள்ளாமல் போனால், பரம கானானாகிய பரலோகத்தை இழந்து போவீர்கள்.

ஆகவே, நேபோ மலைதரும் இந்த இரண்டாம் பாடத்தைக் கண்ணும் கருத்துமாகப் படித்து எந்தச் சூழ்நிலையிலும் தேவனுடைய வார்த்தைக்குப் பயந்து வாழ்ந்து, அவைகளுக்கு நம்மை முழுமையாக ஒப்புக்கொடுத்து பரம கானானுக்கான பாக்கியத்தைப் பெறுவோம்.

## III தேவனுடைய வார்த்தையின்படி கண்டிப்பை மோசே கண்டிருப்பான்

இறுதியாக, மோசே மலையிலிருந்து, தன்னுடைய அகக்கண்களால், தேவனுடைய வார்த்தையின் கண்டிப்பைக் கண்டிருப்பான்.

கானான் தேசத்துக்குள்ளாக நீ பிரவேசிக்கமாட்டாய் என்று தேவன் சொன்ன அச்சமயத்தில், மோசே அதைப் பெரிதாக எடுத்திருக்கமாட்டான் என்றே சொல்லலாம். ஏனெனில், ஜனங்களின் பாவத்தினிமித்தமாக, தேவன் கோபப்பட்ட சில சந்தர்ப்பங்களில் தன்னுடைய கனிவான விண்ணப்பத்தால் மோசே தேவனுடைய கோபத்தை ஆற்றி அவருடைய

மனதை மாற்றியுள்ளான். (யாத். 12:14, உபா. 9:19) அதுபோலவே, தன் காரியத்திலும், தேவன் மனம்மாறுவார் என்று அவன் எதிர்பார்த்திருக்க வாய்ப்புண்டு. எப்படியெனில், தான் கானானைக் காண வேண்டுமென்று தேவனை நோக்கி ஜெபித்துள்ளான். **நான் கடந்துபோய், யோர்தானுக்கு அப்புறத்திலுள்ள அந்த நல்ல தேசத்தையும் அந்த நல்ல மலையையும், லீபேனோனையும் பார்க்கும்படி உத்தரவு கொடுத்தருளும் என்று வேண்டிக்கொண்டேன்.** (உபா. 3:25) என்றுள்ளது. ஆயினும், மோசேயின் இந்த விண்ணப்பத்திற்கு தேவனின் பதில் என்ன தெரியுமா? **"... போதும் இனி இந்தக் காரியத்தைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்.... இந்த யோர்தானை நீ கடந்து போவதில்லை"** என்று மிகத்திட்டமாய் சொல்லிவிட்டார்.

மற்றவர்களுக்காகத் தான் ஜெபித்த போதெல்லாம் தன் விண்ணப்பத்தைக் கேட்ட தேவன், எனக்காக நான் மன்றாடும்போது இப்படி பதில் கொடுத்துவிட்டாரே என்று அவன் அங்கலாய்த்திருப்பான். அத்தோடு தேவனுடைய வார்த்தையின் கண்டிப்பை அங்கே கண்டிருப்பான். இப்படிப்பட்ட தேவனுடைய வார்த்தையைக் குறித்து, தாவீது சொல்வதைக் கவனியுங்கள், **கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது** (சங். 119:89) தேவனுடைய வார்த்தைகள் கண்டிப்பானது மாத்திரமல்ல, அது நிலைத்ததும் முழுமையானதும், இறுதியானதுமாக இருக்கிறதென்பதும் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். (வெளி. 22:18-19).

அருமையான தேவப் பிள்ளையே, தேவனுடைய வசனங்கள் கண்டிப்பானதும், நிலைத்ததும், உறுதியானதும், இறுதியானதும், முழுமையானதுமாய் இருக்கிறதென்பது, நம் ஒவ்வொருவருக்கும் மிகுந்த பயத்தை ஏற்படுத்த வேண்டும். தேவனுடைய வார்த்தையின் உண்மைத் தன்மையை அறியாமல் நாம் இறுதி நாளில் ஏமாந்து போகக் கூடாது.

இன்றைக்கு, அநேகர் தேவனுடைய வார்த்தைகளை - அதிலுள்ள உபதேசச் சட்டங்களை அற்பமாய் எண்ணுகிறதை நாம் காண்கிறோம். முடிந்தால் வசனத்தின்படி நடக்கலாம், முடியாவிட்டாலும் பரவாயில்லை என்ற மேம்போக்கான எண்ணம் கிறிஸ்தவத்துக்குள் வெகுவேகமாகப் பரவி வருகிறது. இப்படிப்பட்ட எண்ணங்கொண்ட கிறிஸ்தவர்களுக்கு நேபோ மலை மோசே, ஒரு நல்ல உதாரணமாக உள்ளான். தேவனுடைய வார்த்தைகளின்படி காரியம் செய்வது மிகவும் அவசியம் என்பதை, இந்த மோசே நமக்கு உடைந்த உள்ளத்தோடும், வடியும் கண்ணீரோடும் போதிக்கிறார். என் விஷயத்திலே நான் மன்றாடியும் எனக்கு

இரக்கங்காட்டவில்லை. ஆகவே, உங்கள் காரியத்திலும் நீங்கள் தேவனுடைய வார்த்தையை மீறி நடக்கிறவர்களாக இருந்தால் அந்நாளில் இரங்கமாட்டார் என்று நம்மையெல்லாம் எச்சரித்து, ஓர் எச்சரிப்பின் சின்னமாக, அந்த நேபோ மலையிலே மோசே நிற்கிறான்.

இவ்வளவு கண்டிப்பான, இந்த தேவனுடைய வார்த்தைகள் தான், நம்மை இறுதி நாளில், நியாயந்தீர்க்கப்போகிறது. (யோவா. 12:48) அந்நாளிலே தேவனுடைய வார்த்தை கண்டிப்பானதாக இருக்கப்போகிறது. அந்நாளில் பிதாவின் சித்தம் செய்யாதவர்களைப் பார்த்து, அதாவது தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களைப் பார்த்து **நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவார்** (மத். 7:23) ஆம், நியாயத்தீர்ப்பு அவருடைய வார்த்தையின்படி, கண்டிப்பானதாக இருக்கும், தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான் என்று பெயர் பெற்ற மோசேவுக்கே **தவறுக்கு தண்டனை** என்ற கொள்கையைக் கடைபிடித்த தேவன், எனக்கும், உங்களுக்கும் மாத்திரம் சலுகை காட்டிவிடுவாரா என்ன? நிச்சயமாக காட்டமாட்டார். ஆகையால், நாம் ஒவ்வொருவரும், தேவனுக்குப்பயந்து அவர் கற்பனைகளைக் கைக்கொள்ளுவோம். (பிர. 12:13).

அன்பானவர்களே, நேபோ மலையிலிருந்து நாம் கற்றுக்கொண்ட இந்த மூன்று பாடங்களும், நம் அனைவரின் வாழ்க்கைக்கும் பயன்பட, உன்னதத்தின் தேவன் நமக்கு உதவி செய்வாராக! அதன் மூலம் நீங்கள் பரம கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வீர்களாக!

ஆமென் !

**செ. ராஜநாயகம்.**

## ஜெபித்த உங்களுக்கு நன்றி ! நன்றி!!

**அக்டோபர் 22,23-2004 ஆகிய நாட்களில் காங்கயம், கிறிஸ்துவின் சபையாரால் நடத்தப்பட்ட ஏழாவது வேதாகம கருத்தரங்கம் வெற்றிகரமாய் நடந்தேற ஜெபித்த, உதவிய, பங்குபெற்ற உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி சொல்கிறோம்.**

**இதன் மூலம் 13 விலையேறப்பட்ட ஆத்துமாக்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தனர்.**

**- ஆசிரியர்.**

# பாதுகாப்பான வழிகாட்டியாக மனசாட்சியை நாம் ஏற்றுக்கொள்ளாதது ஏன்?

மனசாட்சி என்கிற வார்த்தை ஒரு மனிதன், இதயம், மனது ஆன்மா சம்மந்தமான ஒன்று. ஒருவர் சில தகவல்களையும், அறிவையும் அடைந்திருக்கிறார் அதோடு மற்ற காரியங்களை ஒப்பீடு செய்து, அதை சரியா, தவறா என்று முடிவு செய்வது தான் மனசாட்சியாகும். அந்த தகவல்கள் உண்மையின் அடிப்படையில் இருக்கலாம் அல்லது பொய்யான செய்திகளின் அடிப்படையில் அமையலாம். அது சரியாக அல்லது தவறாக இருந்தாலும், அது உண்மை என்று ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதுவே வழிகாட்டியாக பயன்படுத்தப்படலாம். சிலர் மனசாட்சி பாதுகாப்பான வழிகாட்டியாக இருக்கும் என்று நினைப்பதுண்டு. சிலரோ, தங்களுக்கு நல்மனசாட்சி இருப்பதாக சொல்லிக்கொண்டு அது இருப்பதாலேயே எல்லாம் சரியாகதான் செய்வோம் என்கிறார்கள். ஆனாலும், தான் உண்மை பெற்றுக்கொண்டேன் என்று நினைத்து ஒருவர் வஞ்சிக்கப்பட்டிருக்க முடியும். அவருடைய நல்மனசாட்சி உண்மையில் அல்ல தவறின்மீது சார்ந்திருக்கிறது. ஆகவேதான், ஒருவன் தன் மனசாட்சியை, ஒரு காரியத்தை சரியா, தவறா என்று முடிவு செய்வதற்கு இறுதியான அதிகாரமாக இருக்க அனுமதிக்கக் கூடாது.

மனசாட்சி எப்படி செயல்படுகிறது என்பதை புரிந்து கொள்ள, ஒரு சிறுபிள்ளை பற்றி சிந்தித்துப்பாருங்கள். அவன் தன் பெற்றோரால் திருடுவதோ அல்லது மற்றவர்களுடைய பொருளை அனுமதியின்றி எடுத்து தன்னுடையதாக்குவதோ தவறு என்று போதிக்கப்பட்டிருக்கிறான். அவன் தன் பெற்றோருடன் இருக்கும் காலம் எல்லாம் இப்படியே போதிக்கப்படுகிறான். அவன் அவர்களை மதிப்பதாலும், மற்ற நேர்மையான மனிதர்கள் அப்படி போதிப்பதாலும், சட்டமும் அப்படியே சொல்லுவதாலும் இதையே சத்தியம் அல்லது உண்மை என்று ஏற்றுக்கொண்டு அவன் வளருகிறான். ஆனால் ஒருநாள், தன் நண்பனுடைய வீட்டில் தன்னுடையதாக்கிக் கொள்ள தூண்டும் பொருள் ஒன்றை காண்கிறான். தன்னுடையதல்லாத அதை தனக்கென்று எடுத்துக்கொள்ளும் சோதனைக்கு அவன் உட்பட்டு அதை எடுத்துக் கொள்கிறான். அவனுக்கு சொல்லிக்கொடுத்ததற்கு மாறாக அவன்

செயல்பட்டதால், அவனுடைய மனசாட்சி அது தவறு என்று சொல்கிறது. ஆகவே, அவன் எடுத்துக்கொண்டதை திருப்பிக் கொடுத்துவிடும்படி அவன் எண்ணம் அவனை தூண்டுகிறது அவன் அப்படியே செய்கிறான். ஆனால், அதே நேரத்தில் தவறை போதிக்கப்பட்டவனைப் பற்றியும் நாம் இதே போன்று கூற முடியும். அது தவறாக இருந்தாலும், அது பொய்யாக இருந்தாலும், அது உண்மையென்று போதிக்கப்பட்டால், அதற்கு விரோதமாக ஒருவன் செயல்பட்டால், அவனுடைய மனசாட்சி அவனை குத்தும்.

ஆகவே, மனசாட்சி ஒரு நம்பகமான வழிகாட்டியாக இருக்கவேண்டுமானால், அது சத்தியத்தால் வழிநடத்தப்படும். வேறு வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், தேவனுடைய வார்த்தை சத்தியமாக இருக்கிறது, அதுவே நம்முடைய மனசாட்சியை வழிநடத்த வேண்டும். ஒருவனுடைய மனசாட்சி தவறை அடிப்படையாகவோ அல்லது அதை சார்ந்தோ இருக்குமானால் அது நம்பகமான வழிகாட்டியாக இருக்க முடியாது.

கர்த்தருடைய வார்த்தையை நாம் கவனித்தால், நமக்கு ஒரு நல் உதாரணமாக சவுல் விளங்குகிறார். முதலாவது, சவுல் ஒரு யூதன் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவன் யூத மார்க்கத்தை பின்பற்றி அதில் தீவிரமாக இருந்தான். கிறிஸ்தவம் அவனுடைய மார்க்கத்திற்கு எதிரானது என்று எண்ணினான். அதன் விளைவாக, கிறிஸ்தவர்களை துன்பப் படுத்தினான். அவனைப் பற்றி நாம் படிக்கையில், “சவுல் வீடுகள் தோறும் நுழைந்து புருஷரையும், ஸ்திரீகளையும் இழுத்துக்கொண்டுபோய், காவலில் போடுவித்து சபையைப் பாழாக்கிக் கொண்டிருந்தான்.” (அப். 8:3) மேலும் நாம் வாசிக்கையில், “சவுல் என்பவன் இன்னுங் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்திக் கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய். இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்தீரிகளையாகிலும் தான் கண்டுபிடித்தால், அவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டுவரும்படி, தமஸ்குவிலுள்ள ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான். (அப். 9:1,2) அந்த நிகழ்வு தொடர்கிறது, சவுலும், அவனோடு வந்தவர்களும் தமஸ்குவின் சாலையில் இருக்கையில் சவுலுக்கு கர்த்தர் தரிசனம் ஆனார். பின்பு நாம் வாசிக்கிறோம். “அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது; சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன் ஆண்டவரே,

நீர் யார், என்றான் அதற்கு கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே; முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவன் நடுங்கித் திகைத்து ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்கு கர்த்தர், நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார் (அப். 9:4-6). அதற்கு பின்பாக வேதாகமம் நமக்குச் சொல்கிறது அனனியா என்று பெயர் கொண்ட சுவிசேஷ பிரசங்கியார் சவுலிடம் வந்து, நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போக கழுவப்படு என்றான் (அப். 22:16) இப்பொழுது சவுல் என்ன செய்தார்? அவன் கிறிஸ்துவை விசுவாசித்தான், தன் பாவங்களில் இருந்து மனந்திரும்பினான். கிறிஸ்துவே ஆண்டவர் என்பதை ஏற்றுக்கொண்டான், அவன் ஞானஸ்நானம் பெற்றான். அப்படி செய்தபின்பு அவன் உடனே கிறிஸ்துவே தேவனுடைய குமாரன் என்று பிரசங்கிக்கத் தொடங்கினான். (அப். 9:20).

இந்த மனிதனைக் குறித்து சிந்தியுங்கள், யூத மார்க்கத்தை உண்மையாய்ப் பின்பற்றி அதில் பக்தி வைராக்கியமாயிருந்தான். கிறிஸ்தவத்தை மிகவும் எதிர்த்தான் அதை விசுவாசித்த ஆண்கள், பெண்களை துன்புறுத்தும் அளவுக்கு அவன் அப்படிச் செய்தான், ஆனால், திடீர் என்று கிறிஸ்துவை அவன் விசுவாசித்தான், அவருக்கு கீழ்ப்படிந்த பின், அவரை தேவனுடைய குமாரன் என்று பிரசங்கித்தான். அது மாத்திரமல்ல, எஞ்சிய அவனுடைய வாழ்க்கையை கர்த்தரை சேவிப்பதிலும், அவரை பிரஸ்தாபம் செய்வதிலும் செலவழித்தான்.

ஆனால், கிறிஸ்தவனாக அவன் மாறாமல் இருந்த பல ஆண்டுகளைப் பற்றி என்ன? அவன் செய்ததில் உண்மையாகவும், நேர்மையாகவும் அவன் இருந்தானா? அவன் ஏன் இதை எல்லாம் செய்ததாக அவனே சொல்லக் கேளுங்கள், "முன்னே நானும் நசரேயனாகிய இயேசுவின் நாமத்திற்கு விரோதமாய் அநேக காரியங்களை நடப்பிக்கவேண்டுமென்று நினைத்திருந்தேன். அப்படியே நான் எருசலேமிலும் செய்தேன். நான் பிரதான ஆசாரியர்களிடத்தில் அதிகாரம் பெற்று, பரிசுத்தவான்களில் அநேகரைச் சிறைச்சாலைகளில் அடைத்தேன்; அவர்கள் கொலை செய்யப்படுகையில் நானும் சம்மதித்திருந்தேன், சகல ஜெப ஆலயங்களிலும் நான் அவர்களை அநேகந்தரம் தண்டித்து, தேவதூஷணஞ்சொல்லக் கட்டாயப்படுத்தினேன்; அவர்கள் பேரில் மூர்க்க வெறி கொண்டவனாய் அந்நிய பட்டணங்கள் வரைக்கும் அவர்களைத் துன்பப்படுத்தினேன். (அப். 26:9-11).

அவன் சபையைத் துன்பப்படுத்தின நாட்களில் நல்மனசாட்சியுடன் அப்படி செய்ததாக அவனே கூறுகிறான் (அப். 23:1) அவன் செய்வதில் நேர்மையாகவும், உண்மையாகவும் அவன் இருந்திருக்கிறான். அவன் செய்வது நல்லது என்பதை பற்றிய சந்தேகம் அவனுக்கு எழவில்லை. ஆனால், உண்மை என்னவென்றால், அவனுடைய மனசாட்சி, தேவன் விரும்பும் காரியங்களில் அடிப்படையில் செயல்படாமல், அவன் தனக்கு சரி என்று நினைத்ததை வைத்து செயல்பட்டது. சத்தியத்தை அவன் கற்றுக்கொண்டு, அதற்கு கீழ்ப்படிந்த பிறகுதான் அவன் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டான்.

சவுல் மனமாற்றம் அடைந்த பிறகு பவுல் என்று அழைக்கப்பட்டான். அதற்கு பின்பு சில வருடங்கள் கழித்து அவன் எழுதுகிறான், என்னை பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்றெண்ணி, இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தின படியால், அவரை ஸ்தோத்தரிக்கிறேன். முன்னே நான் தூஷிக்கிறவனும், துன்பப்படுத்துகிறவனும், கொடுமை செய்கிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தும், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன், நம்முடைய கர்த்தரின் கிருபை கிறிஸ்து இயேசுவின்மேலுள்ள விசுவாசத்தோடும் அன்போடுங்கூட என்னிடத்தில் பரிபூரணமாய்ப் பெருகுகிறது. பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான். அப்படியிருந்தும், நித்திய ஜீவனை அடையும்படி இனிமேல் இயேசு கிறிஸ்துவினிடத்தில் விசுவாசமாயிருப்பவர்களுக்குத் திருஷ்டாந்தம் உண்டாகும் பொருட்டுப் பிரதான பாவியாகிய என்னிடத்தில் அவர் எல்லா நீடிய பொறுமையையும் காண்பிக்கும்படிக்கு இரக்கம் பெற்றேன், நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதா காலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென் (Iதீமோத் 1:12-17).

(தொடரும்)

J.C. சோட் J.C. Choate

பெண்கள் பகுதி

# எச்சரிப்பை வெறுத்தவள்

"**ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை**" என்று மத்.: 11:11-ல் வாசிக்கிறோம். நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன் பிறந்து அவருக்கு வழியை ஆயத்தம் பண்ணினவன் இவன். மனந்திரும்புங்கள் பரலோக இராஜ்யம் சமீபமாய் இருக்கிறது என்று சத்தமாய் பிரசங்கித்தவன் இந்த யோவான் ஸ்நானகன். இவன் இயேசு கிறிஸ்துவைப்பற்றிக் கூறும்போது "**என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார். அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல...**" என்று கூறுகிறான். அதோடு இயேசு கிறிஸ்துவுக்கு யோர்தான் நதியில் ஞானஸ்நானம் கொடுத்தவனும் இந்த யோவானே (மாற்கு. 1:9) இந்த மாபெரும் மனிதனுடைய உயிர் நம்மைப் போன்ற ஒரு பெண்ணின் கைக்கு இரையானது என்பதை நினைக்கும்போது வேதனையாய் உள்ளது.

யார் இந்த பெண்? மாற்கு. 6:17-28 வரையுள்ள வசனப்பகுதிகளில் இவள் உள்ளாள். ஏரோது தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியை தனக்கு மனைவியாக்கிக் கொண்டான். அவள் பெயர் ஏரோதியாள். ஏரோது செய்த இந்த தவற்றை யோவான் ஸ்நானகன் சுட்டிக்காட்டி, அது நியாயமல்லவென்று கூறுகிறான். இதனால் ஆத்திரமடைந்த ஏரோது யோவானைக் கட்டிக் காவலில் வைத்து விடுகிறான். ஆனால் யோவான் நீதியும், பரிசுத்தமுமுள்ளவனென்று ஏரோது அறிந்து அவனுக்குப்பயந்து, அவனைப் பாதுகாத்து, அவன் யோசனையின்படி அநேக காரியங்களைச் செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக் கேட்டு வந்தான்.

இந்த ஏரோது தன் பிறந்தநாள் விழாவின்போது தன்னுடைய பிரபுக்களுக்கும், சேனாதிபதிகளுக்கும், கலிலேயா நாட்டின் பிரதான மனுஷருக்கும் ஒரு விருந்து பண்ணினபோது, ஏரோதியாளின் குமாரத்தி சபையில் நடனம் பண்ணி, பந்தியிருந்தவர்களை சந்தோஷப்படுத்தினாள். அப்போது ராஜா உனக்கு என்ன பரிசு வேண்டும்? ராஜ்ஜியத்தில்பாதி கேட்டாலும் அதை உனக்கு தருவேன் என்று கூறினான். இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஏரோதியாள் தன் மகளிடம்

யோவான் ஸ்நானகனுடைய தலையைக் கேள் என்று கூறி, அவனை சிரச்சேதம் செய்வதற்கு வழி வகுத்தாள்.

இவளின் வஞ்சக வார்த்தைகளைக் கேட்டு ஏரோது பாவஞ்செய்தான். அவனைக் காவல் பண்ணினாலும், அவன்மேல் பட்சமுள்ளவனாயிருந்தான். யோவான் நீதியும், பரிசுத்தமுமுள்ளவனாய் இருந்தபடியால், ஏரோது செயல்பட அஞ்சினான். ஆனாலும், பிரபுக்களுக்கும், சேனாதிபதிகளுக்கும் மத்தியில் அவளுக்கு வாக்குக் கொடுத்து விட்டபடியால், தன்னுடைய கௌரவத்தை தற்காத்துக் கொள்வதற்கு அவள் வேண்டுகோளை நிறைவேற்றுவதைத் தவிர வேறு வழியில்லை. ஏரோது மன்னனின் யோசனையில்லாத வாக்குறுதியில் ஒரு நீதிமானின் தலை துண்டிக்கப்பட்டது எவ்வளவு கொடுமை.

ஏரோதியாள் தன்னை தவறு என்று சுட்டிக்காட்டிய தேவ மனுஷனை வெறுத்தாள். தன் பாவத்தைச் சுட்டிக்காட்டும்போது அதை ஏற்றுக்கொள்ள மனம் அற்றவளாய் இருந்தாள். இன்றைக்கும் அநேக பெண்கள் தேவனுடைய வார்த்தையை கூறும் தேவமனிதர்களை வெறுக்கிறார்கள். வசனம் தங்களை எச்சரிக்கும்போது முழுப்பகையாய் அவர்களைப் பகைக்கிறார்கள். இங்கு ஏரோதியாள் தான் பாவம் செய்வதோடு அல்லாமல் தன் மகளையும் அதற்கு உடன்பட வைக்கிறாள். ஒட்டு மொத்த குடும்பமே கொலைகாரர்களாகிவிடுகிறார்கள்.

இன்றைக்கும் அநேக பெண்கள் தங்கள் பிள்ளைகளை சபைக்கு விரோதமாய் எழுப்பி செயல்பட வைக்கிறார்கள். ஆதியிலிருந்தே நாம் பார்க்கும்போது தேவனுக்கு கீழ்ப்படியாமல் போகும்போது அது கொலையில் தான் போய் முடிகிறது. ஏவாள் தேவனுக்கு கீழ்ப்படியாமல் போனபோது பாவம் உலகில் பிரவேசித்தது. அதன் தொடர்ச்சியாக சகோதரனே, அவன் சகோதரனை கொலை செய்யும்படியான சூழ்நிலை உருவெடுத்தது (ஆதி. 4.8).

ஏரோதியாள் இவ்வாறு செயல்படக்காரணம் தான் செய்து கொண்டிருந்த பாவத்தை விட்டு விட மனதில்லாததுதான். இன்றும் நம்மில் அநேகர் ஆவிக்குரிய வகையில் பிசாசோடு ஜீவித்துக் கொண்டிருக்கிறோம். வசனம் நம்மை எச்சரிக்கிறது. தேவ மனிதர்கள் நம்மை வசனத்தை கொண்டு எச்சரிக்கிறார்கள். எத்தனை பேர் ஏற்றுக்கொள்கிறோம்? இந்த ஏரோதியாள் பாவத்தை நேசித்தாள். தேவ மனிதனை பகைத்தாள். இதை வாசிக்கும் அன்பான சகோதரியே! நாமும் கூட வேதாகமம் நம்மை எச்சரிக்கும் போது, கோபமும், எரிச்சலும் கொள்ளாமல் தாழ்மையோடு அதை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிந்து, இரட்சிப்பைப் பெறுவோம். எதிர்த்து நின்று தேவ கோபாக்கினையைப் பெற்றுக் கொள்ளவேண்டாம்.

அடுத்து, ஏரோதியாள் தன் மகளையும் தன் தவறுகளுக்குக் கூட்டாளியாக்கிக் கொள்கிறாள். இன்று அநேக தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தவறான கருத்துக்களை போதித்து அவர்களுடைய

நல்வழியை திசைதிருப்பி விடுகிறார்கள். சமுதாயத்திலும், சபையிலும் இதனால் அநேக இடையூறுகள் நேரிடுகின்றன. உண்மையான சத்தியத்தை பரப்புவதற்கு பெற்றோர்கள் தடையாக மாறிவிடுகிறார்கள். அநேக பெற்றோர்கள் தங்கள் தீய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தங்களின் பிள்ளைகளின் செல்வாக்குகளையும், பதவிகளையும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். பிரபல்யம் அடையவேண்டும் என்ற ஆசையில் பிள்ளைகளை நடனப்பயிற்சி, மற்றும் களியாட்டுகளைக் கற்றுக் கொள்ளவும் உற்சாகப்படுத்துகிறார்கள். பெற்றோர்களே பிள்ளைகளுடைய வாழ்க்கையை எவ்வாறு பாழ்படுத்தி அழிவான பாதையில் இட்டுச் செல்கின்றனர், என்று ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள்.

தாய்மார்களே, நம்முடைய பிள்ளைகளுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நாம் தடையாக உள்ளோமா? இந்த ஏரோதியாளைப் போல நாம் செயல்பட கூடாது. மாறாக நம் பிள்ளைகளை கர்த்தருக்காக ஒப்புக்கொடுப்போம். தேவ ஊழியர்களை தாங்கும்படி செய்வோம். அப்போது நம்பிள்ளைகள் ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்வார்கள்.

தேவனுடைய மனுஷனை கொலை செய்தாள் என்ற பழிக்கு காரணமாயிருந்தவள் இந்த ஏரோதியாள் என்ற சொல் காலத்திற்கும் அழியாமல் உள்ளது. தயவுசெய்து நாம் இப்படிப்பட்ட அநியாயமான செயலுக்கு நம்மை ஒப்புக்கொடுக்காமல், அமைதலும், சாந்தமும் உள்ள இருதயத்தோடு சத்தியம் நம்மை எச்சரிக்கும்போது அதை பக்குவமாய் ஏற்றுக்கொண்டு பாவத்தை விட்டு, பரிசுத்தமாய் ஜீவிப்போம்.

நம் பிள்ளைகளையும் கர்த்தருடைய காரியத்தில் பங்கேற்கச் செய்வோம். அவர்கள் எதிர்த்து நிற்க நாம் ஒருபோதும் அனுமதி தரவே கூடாது. பிள்ளைகளோடு சேர்ந்து வசனத்தை ஏற்றுக்கொண்டு சபையை தாங்குவோம். சத்தியத்திற்காக வைராக்கியமாய் இருப்போம்.

**ரேச்சல் இராஜநாயகம்**

## இயேசு கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

**(ரோமர் 5-ம் அதிகாரத்திலிருந்து....)**

1. தேவனிடத்தில் சமாதானம் (வசனம்.1)
2. கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியம், (வசனம்.2)
3. தேவமகிமையில் நம்பிக்கையில் மேன்மை பாராட்டல் (வசனம் 2)
4. உபத்திரவத்திலும் களிகூறுதல். (வசனம்.4)
5. உன்னதமான நம்பிக்கை (வசனம். 5)
6. தேவனுடைய அளவற்ற அன்பு (வசனம். 8)
7. தேவனுடைய ஒப்புரவாக்கப்படுதல். (வசனம் 10,11)
8. தேவ கோபாக்கினையிலிருந்து விடுதலை (வசனம். 15,16)
9. நித்திய ஜீவன் (வசனம். 17)
10. நீதிமான்களாக்கப்படுதல். (வசனம். 19)

வாலிபர் பகுதி

# இன்னும் பேசுகிறது

பூவலயத்தை தன் குரலைக் கொண்டு வனைந்தெடுத்த குயவனாகிய தேவன், தன் சிருஷ்டிப்பின் சிகரமாகிய மனிதனை தன் சாயலின்படி உருவாக்கினார், அப்படி அவனை படைப்பதற்கு முன்னமே அவனுக்கு தேவையான ஞாயிறு, சந்திரன், நீர் நிலைகள், மலை முகடுகள், நட்சத்திரங்கள், மிருகங்கள், பறவைகள், நீர்வாழ் உயிர்கள், மரங்கள், செடி, கொடிகள் என அனைத்தையும் அவனுக்காக உருவாக்கி, அவன் இப்புவியில் களிப்பாய் கவிபாடியிருக்க ஓர் அழகிய தோட்டத்தை உண்டாக்கி அதில் அவனை வைத்தார், அவன் தனியே இருப்பது நல்லதல்ல என ஏற்ற துணையை உருவாக்கி முதல் மனையை அமைத்தார், ஆனால், அவனோ தேவ வார்த்தையை மீறி தனக்கு வினையை வருவித்துக் கொண்டான், அவரோடு இருந்த உறவை இழந்தான்.

ஆதாமும், ஏவாளும் பாவம் செய்ததால், ஏதேன் தோட்டத்தை விட்டு விரட்டியடிக்கப்பட்டார்கள், காலம் உருண்டோடியது, அவர்களுக்கு காயீன், ஆபேல் என இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். முதலவன், தேவனுக்கு ஏற்புடைய பலியை செலுத்தவில்லை, ஆபேலின் பலியை ஆண்டவர் ஆவலுடன் ஏற்றுக்கொண்டார். அப்படி செய்ததால், பொறாமை என்னும் கொடிய குணம் காயீனின் மனக்குன்றேறி நின்றது. விளைவு ஆபேலின் செங்குருதி மண்ணில் விழுந்தது, நீதியாய் பலி செலுத்தின அவனைப் பற்றி வேதம் விளம்புகையில், "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான் அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்". (எபி. 11:4). அவன் நம்மிடம் என்ன பேசுகிறான் என்பதை இம்மாதம் கேட்போம்.

## தவறான முடிவெடுத்தான்

தேவன் படைக்கும்போது, தன் முடிவை தானே எடுக்கும் திறனை மனிதனுக்குக் கொடுத்தார். ஆதாமிடம், அவர் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கக்கூடாது என்று சொன்னபோது, அதை புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்றார் (ஆதி. 2:16,17) இதை நாம்

தியானிக்கையில் தேவன் மனிதனிடத்தில் நன்மையையும், தீமையையும் சொல்லிவிடுகிறார். அதில் ஒன்றை தேர்ந்தெடுக்கும் உரிமையை அவனிடமே விட்டுவிடுகிறார். காயீனும் தன் சகோதரனை கொலை செய்த விசயத்தில் தன் உக்கிர கோபத்தை அடக்கமுடியாமல் அவனை கொலை செய்யும் தவறான முடிவை தானே எடுத்துக்கொண்டான்.

தேவன், எப்பொழுதுமே மனுக்குலத்தை எதற்குமே கட்டாயப்படுத்தினதில்லை. இஸ்ரவேல் ஜனம் கானானை சுதந்தரிக்கப் போகும் வேளையில், "இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய கட்டளைகளின்படியெல்லாம் செய்ய நீ கவனமாயிருக்கும்படிக்கு, அவர் சத்தத்திற்கு **உண்மையாய்ச் செவிகொடுப்பாயானால்,** உன் தேவனாகிய கர்த்தர் பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும் உன்னை மேன்மையாக வைப்பார்." (உபா 28:1) என இயம்புகிறார் வாலிபர்களே, கவனித்தீர்களா அவர் இஸ்ரவேல் ஜனத்தை மேன்மையாக வைப்பதற்கு அவர்கள் செவிகொடுக்க வேண்டும். தேவன், அவர்களிடம் நீ கட்டாயம் செவிகொடு என்றா சொல்கிறார் இல்லை **"செவி கொடுப்பாயானால்"** என்று முடிவை அவர்களிடமே விட்டுவிடுகிறார்.

தேவ தாசனாகிய யோசுவா இவ்வுலகத்தைவிட்டு கடந்து போகும் வேளை வந்த போது இதே இஸ்ரவேல் ஜனத்திடம் "கர்த்தரை சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று **இன்று தெரிந்துகொள்ளுங்கள்....**" (யோசு 24:15) என்றார். இங்கேயும் நாம் கவனிக்கையில் தெரிந்துகொள்ளும் உரிமையை நமக்கு தேவன் கொடுப்பதை நாம் காணலாம். ஆகவே, ஆபேல் இரத்தம் நமக்கு சொல்வது என்னவென்றால் காயீன் சுயமாக ஒரு தவறான முடிவெடுத்தான் என்பதுதான். நாமும் கூட தேவனை பின்பற்றும் விஷயத்தில் மனமுவந்து அவரை சேவிக்க முடிவெடுப்போம், அதைத்தான் அவர் விரும்புகிறார்.

## பாவம் பிரிவினையை உண்டாக்குகிறது

காயீன், தன் சகோதரனை கொலை செய்த பின்பு, ஆபேலின் இரத்தம் தேவனை நோக்கி கூப்பிட்டது என்று தேவன் காயீனிடம் சொன்னார். அதன்பின்பு வாசிக்கையில், அப்படியே காயீன் **கர்த்தருடைய சந்நிதியைவிட்டுப் புறப்பட்டு,** ஏதேனுக்குக் கிழக்கான நோத் என்னும் தேசத்தில் குடியிருந்தான். (ஆதி. 4:16). வாலிபர்களே! கவனித்தீர்களா பாவம் நம்மை தேவ சந்நிதியிலிருந்து பிரித்து விடுகிறது. அவர் பாவத்தை பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணன் (ஆப.1:13). காயீனுக்கு ஏற்பட்ட அதே நிலைதான் பாவம் செய்யும் ஒவ்வொருவருக்கும் ஏற்படும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

ஏசாயா தன்னுடைய நூலில் சொல்லும்போது, "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவி கொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" என்கிறார். (59:1,2) இது எத்தனை உண்மை, புதிய ஏற்பாட்டில் பவுல் கூறும்போது, முற்காலத்தில் நாம் பாவங்களிலும் அக்கிரமங்களிலும் மரித்திருந்தோம் என்று கூறுகிறார் (எபே. 2:1,2) அது மாத்திரமல்ல, தேவனை அறியாதவர்களும், சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களும் தேவ சந்நிதியிலிருந்து பிரிக்கப்படுவார்கள். இது இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும் (2 தெச. 1:10).

எனக்கருமையானவர்களே, காயீன் காணிக்கையில் தவறு செய்தான், அதன்பின் அது அவனை தன் சகோதரனுக்கு விரோதமாக எழும்ப செய்தது. ஆகவே பாவம், ஒருவனை சில வேளையில் தன் சகோதரனுக்கு விரோதமாக்குகிறது. மூன்றாவது முற்பிதா யாக்கோபு ஏசாவை கூழ் விஷயத்தில் வஞ்சித்தான், அதோடு அவனுடைய ஆசீர்வாதத்தை தன் தகப்பனை ஏமாற்றி வாங்கிக் கொண்டான் (ஆதி. 25:29-34; 27:1-29) விளைவு - ஏசா சொல்வதை கவனியுங்கள், "யாக்கோபைத் தன் தகப்பன் ஆசீர்வதித்ததினிமித்தம் ஏசா யாக்கோபைப் பகைத்து; என் தகப்பனுக்காகத் துக்கிக்கும் நாட்கள் சீக்கிரமாய் வரும், அப்பொழுது என் சகோதரனாகிய யாக்கோபைக் கொன்று போடுவேன் என்று ஏசா தன் இருதயத்திலே சொல்லிக்கொண்டான்". (ஆதி. 27:41) பார்த்தீர்களா பாவம் படுத்துகிறபாட்டை.

வாலிபர்களே! காயீன் காணிக்கையில் தவறு செய்தான், பின்பு ஆபேலின் மீது பொறாமை, பின்பு அவன்மீது மூர்க்க வெறி கொண்டு கொலை செய்தான். இப்படி ஒரு பாவம், இன்னொரு பாவத்திற்கு வழிநடத்துகிறது என்று பாருங்கள். இஸ்ரவேலின் இனிய பாடகன் தாவீது பத்சேபாலை இச்சித்து, அவள் புருஷனை கொலை செய்த விஷயத்திலும், பாவம் அவனை படிப்படியாக பிடித்துக்கொண்டதை நாம் நன்றாய் அறிவோம். ஆகவே, பாவத்தை முதல் கட்டத்திலேயே நாம் தவிர்ப்பது சாலச் சிறந்தது. அப்படிச் செய்ய தேவன் உதவி செய்வாராக!

ஆமென் !

**ஜே. பிக்கின்ஸ்**

சிறுவர் பகுதி

# நடத்தையினால் பாடம் தரும் நத்தை

எனக்கு பிரியமான தம்பி தங்கைகளே! உங்கள் யாவருக்கும் மீட்பர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். இம்மாதமும் உங்களை இதன் மூலம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மாதந்தோறும் வெளிவரும் காரியங்கள் பயனுள்ளதாய் இருக்கும் என நம்புகிறேன். இந்த மாதம் ஒரு புதுவிதமான பாடத்தை கற்றுக்கொள்ளப்போகிறோம். சரி, பாடத்திற்கு போகலாமா?

தன் உடலையே பாதமாக வைத்திருக்கும் ஒன்றை கேள்விப் பட்டிருக்கிறீர்களா? வாயையும் பாதத்திலே வைத்திருக்கிறது. அது, அந்த அது எது என்று யோசிக்கிறீர்களா? வேறொன்றுமில்லை நம்மெல்லாருக்கும் தெரிந்த நத்தை (Snail) தான் அந்த அது. அதினுடைய பாதம் தான் உடம்பு. உடம்பின் முன் பகுதி தலை என்கிறோம். அந்த தலை மீது உணர்வுகளை அறிய உறுப்புகள் நான்கு உள்ளது. (Tentaclos) இதில் இரண்டு கண்கள். மீதி உள்ள இரண்டு உணர்வறியும் உறுப்பு. கண்கள் அதன் நுனியில் இருப்பதால் சுற்றிலும் பார்க்கும் திறன் படைத்திருக்கிறது.

நத்தைகள் சிறியது முதல் பெரியது வரை உலகின் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. சிறிது என்றால் ஊசி முனையை போலவும், பெரிய நத்தை என்பது பூனையைப் போலவும் இருக்கும். அவற்றுள் பெரும்பாலானவைகள் தண்ணீரில் வாழ்கின்றன. அவ்வாறு வாழ்பவைகள் மீன்களைப் போன்று சுவாசிக்கின்றன. மற்றும் சில நத்தைகள் நிலத்தில் வாழ்ந்து நம்மைப் போன்று நுரையீரலின் உதவியோடு சுவாசிக்கின்றன. பெரும்பாலான வகைகள் விஷத்தன்மை உடையவைகளாய் இருக்கின்றன.

தேவனுடைய படைப்பிற்கே உரிய தனித்தன்மையை நாம் இந்த நத்தைகளிலும் பார்க்கலாம். தனிச்சிறப்பை உடைய சில விஷயங்கள் நத்தைகளிடம் உண்மையாகவே இருக்கின்றன. அவற்றை காண்போமா?

**முதலாவது,** நத்தைகள் தங்களுக்கென்று ஒரு வீட்டை கட்டுகின்றன. அதைத்தான் நாம் **ஓடு** என்கிறோம். அந்த ஓட்டை நத்தைகள் தங்கள் பின்னாலேயே சுமந்து கொள்கின்றன. நத்தை வளரும் போது அந்த ஓடும் அதற்கேற்றவாறு வளருகின்றது. அந்த ஓட்டின் நன்மை என்ன? என்று பார்க்கலாமா? முக்கியமாக, இந்த ஓடுகள் இவற்றிற்கு எதிரியிடமிருந்து

"பாதுகாப்பைத்" தருகிறது. எதிரிகள் யார்? தவளை, எலி, பறவைகள் ஆகியவை எதிரிகளாக இருக்கின்றன. இவற்றிடம் இருந்து நத்தைக்கு பாதுகாப்பு தருவது ஓடுதான்.

மேலும் "தாங்கமுடியாத வானிலையிலிருந்தும் பாதுகாக்கிறது" (மழை, கடும் வெயில்) நத்தை தன்னை எப்பொழுதும் ஈரமாகவே வைத்துக் கொள்ளும் தன்மை உடையது. காற்று, வறண்ட காற்றாக வீசினால் ஓட்டினுள் சென்று மறைகிறது. மழையே பெய்யாத ஒரு சூழ்நிலை இருப்பின் அவைகள் ஓட்டின் உள்ளாக சென்று அந்த ஓட்டின் திறந்த பகுதியை (ஓட்டையை) ஒருவித திரவியத்தை (Slime) வைத்து மூடிக்கொள்கின்றன. அப்படி ஓட்டினுள் சென்ற நத்தை மழை பெய்யும் வரை உள்ளேயே தங்கி இருக்கும்.

**இரண்டாவதாக,** நிலத்தில் வாழும் நத்தைகள், நிலத்திற்கு கீழே புதைந்து "மழை காலங்களில் தூங்குமாம்." பின் பனிகாலம் முடிந்தவுடன் அவை வெளியே வந்து உணவை தேடுகின்றன.

**மூன்றாவதாக,** நத்தைகள் தங்களுக்கென்று ஒரு "வழியை உண்டு பண்ணுகின்றன." அவைகள் **திரவியத்தைக்** கொண்டு (Slime) தங்களுக்கென்று ஒரு வழியை ஆயத்தம் பண்ணுகின்றன. அவைகள் அந்த **திரவியத்தின்** மூலம் தங்கள் எதிரிகளை சிக்கவைக்கின்றன. இதன் மூலம் ஒருவித பாதுகாப்பும் கிடைக்கிறது.

**நான்காவது,** அவைகளிடம் பற்கள் இல்லை. ஆனால் அவைகளுடைய நாக்கு மிகவும் கடினமாய் இருக்கின்றன. அவற்றை வைத்து தன்னுடைய உணவை அது உட்கொள்கிறது.

இவ்வாறு பல விநோதமான தனித்தன்மை வாய்ந்த செயல்களை இவைகள் செய்கிறதே! இது எப்படி? அதன் உடல் அமைப்பு அதற்கேற்றவாறு அமைந்திருக்கிறது. இந்த நத்தை நமக்கு என்ன பாடம் தருகிறது? நத்தையின் மூலம் நமது தேவனுடைய படைப்பின் மேன்மையையும், அவருடைய ஞானத்தின் மகத்துவத்தையும் நம்மால் அறிந்து கொள்ளமுடிகிறது.

அப்படிப்பட்ட தேவனை நாம் தெய்வமாக கொண்டிருக்கிறோம். எனவே, அந்த வல்லமை படைத்த தேவனுடைய கிருபையையும் இரக்கத்தையும் நாமும் பெற்றுக்கொள்ள, நத்தைகளைப் போல நாம் தேவனுக்கு சாட்சியாய் இப்பொழுதிருந்தே ஜீவிக்க வேண்டும். நீங்கள் தயாரா?

**Abel R. NAYAGAM**

# III யோவான் ஒரு கண்ணோட்டம்

**ஆசிரியர் : அப்போஸ்தலன் யோவான்**
**காலம் : சுமார் 90 கி.பி.**

## இந்நூல் பற்றி

1. இந்நூல் காயு என்பவருக்கு எழுதப்பட்டது. புதிய ஏற்பாட்டில் குறைந்தது 3 காயுக்களை நாம் அடையாளம் காணலாம்.
   - (a) மக்கெதோனியாவைச் சார்ந்தவன் (அப். 19:29)
   - (b) தெர்பையைச் சார்ந்தவன் (அப். 20:4)
   - (c) கொரிந்தைச் சார்ந்தவன் (Iகொரி 1:15; ரோமர் 16:23)
2. மேலே குறிப்பிட்டுள்ள இவர்களுள் இந்நூல் யாருக்கு எழுதப்பட்டது என்பதை நாம் கண்டறிய முடியாது.
3. 14 வசனங்கொண்ட இந்நூலில் சத்தியம்-6 முறையும், அன்பு-2 முறையும், பிரியமானவன்-4 முறையும் இடம் பெற்றிருக்கிறது.
4. தியோத்திரேப்பு என்பவன் சபையில் முதன்மையாயிருக்க விரும்பினபடியால் யோவானை சேர்ந்தவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை
5. மூல கிரேக்க பாஷையிலான புதிய ஏற்பாட்டில் இந்நூல் மிகவும் சிறியது எனக் கருதப்படுகிறது.
6. தேமேத்திரியு என்பவன் எல்லாராலும் நற்சாட்சி பெற்றவனாயிருந்தான்

## இந்நூலின் செய்தி

1. ஆவிக்குரிய சுகமே, சரீர சுகத்தைக் காட்டிலும் முக்கியமானது (2)
2. ஒரு நபர் சபையின் மீது ஆளுகை செய்வது புதிய ஏற்பாட்டு சபை மாதிரிக்கு எதிரானதாகும். (அப். 14:23; பிலி. 1:1; மத். 20:20-28)
3. நன்மை அல்லது நல்லது செய்கிறவர்களை நாம் ஊக்கப்படுத்த வேண்டும். தீமையை செய்கிறவர்களை நாம் வெளிப்படுத்தவேண்டும்.
4. சத்தியத்தை போதிக்கிறவர்களை நமது தியாகத்தால் தாங்கவேண்டும். (6,7,8; பிலி. 1:3-5; 4:10-17)

# விசுவாசத்தின் அடிப்படைகள்

கடந்த மாதம் நம்முடைய பாடத்தை நாம் முடிக்கும் போது, கள்ள உபதேசம், கள்ளப் போதகர்களையும், அந்த கள்ளப்போதகத்தை விசுவாசித்துக் கீழ்ப்படிபவர்களையும் அழித்து, இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லுகிறவர்களிடத்தில் பிரிவினையை ஏற்படுத்துகிறதென்று பார்த்தோம்.

புதிய ஏற்பாட்டிலிருந்து, நாங்கள் பதில் கொடுக்க விரும்பும், அடுத்த கேள்வி, "ஆரோக்கியமான உபதேசங்கள் சம்பந்தமாக தனிப்பட்ட கிறிஸ்தவர்களின் பொறுப்பு என்ன என்பது?"

முதலாவது, தேவன் எனக்கும், உங்களுக்கும் Iயோவா 4:1-ல் நாம் சிந்திக்கும்படியான ஒரு கட்டளையைக் கொடுத்துள்ளார். நாம் எல்லா ஆவிகளையும் விசுவாசிக்கக் கூடாது என்கிறார். இப்பகுதியில், நான் வேதவசனங்களை சரியாகப் போதிக்கிறேன் என்று சொல்லுகிற ஒவ்வொருவரையும் நாம் விசுவாசிக்கக் கூடாது என்று மிகவும் தெளிவாகவே சொல்லுகிறார். இங்கே, நாம் என்ன செய்ய வேண்டும் என்று கூறுகிறார்? வேதாகமத்தைப் போதிக்கிறவர்களை நாம் சோதித்துப் பார்க்க வேண்டும். அவைகள் "தேவனிடத்திலிருந்து வந்தவைகளா" அதாவது, அவர்கள் தேவனுடைய சுத்தமான வசனங்களைப் போதிக்கிறார்களா என்று தீர்மானிக்கும்படியாக நாம் அப்படிச் செய்ய வேண்டும்.

தேவன் ஏன், இந்தக் கட்டளையை கொடுக்கிறார்? இந்தக் கேள்விக்கான பதிலை அவரே நமக்குக் கொடுக்கும்படியாய் அவரை அனுமதிப்போம் ! "..... அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றி யிருப்பதினால்", என்று தேவன் கூறுகிறார். இது முதல் நூற்றாண்டுக் காலத்தில் உண்மையாயிருந்தது. அதே நிலை இன்றைக்கும் அப்படியே இருக்கிறது!

இங்கே, கேள்வி, மற்றவர்கள் போதிப்பதை, நாம் எப்படி சோதிப்பது? இதைச் செய்வதற்கு நாம் பெரேயா பட்டணத்தாரைப் போல நற்குணசாலிகளாக இருக்க வேண்டும். அப். 17:11-ல், அவர்கள் ".... காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்திருக்கிறார்கள்" என்று தேவன் அவர்களைப் புகழ்கிறார். ஆராய்ந்து பார்த்தல் என்றால், எது உண்மை எனக் கண்டறிய ஆர்வத்தோடு தேடிப்படிப்பது. ஆகவே, அவர்களுடைய சிறந்த முன்மாதிரியைப் பின்பற்றும்படியாய், நானும், நீங்களும் காரியங்கள் எப்படி இருக்கிறதென்று

தெரிந்து கொள்ள வேதாகமத்தை தினந்தோறும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நமக்குப் போதிக்கப்பட்டு, நாம் செய்து வருகிற காரியங்கள், எந்த விதத்திலும் கூட்டியோ, குறைத்தோ, இல்லாமல், புதிய ஏற்பாட்டு வசனங்களின்படி சரியாக இருக்கிறதா என்று தீர்மானிக்கும் படியாய் இதைச் செய்ய வேண்டும்.

எபே 5:10,11-ன் படி, ஒவ்வொரு கிறிஸ்தவனுக்குமான இன்னொரு பொறுப்பை தேவன் பட்டியலிடுகிறார். முதலாவது, நானும், நீங்களும், "..... தேவனுக்கு ஏற்புடையது எது என்று கண்டுபிடிக்க வேண்டும்." அதை, தேவனுடைய சித்தம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற புதிய ஏற்பாட்டைப் படிப்பதன் மூலமாகத் தான் செய்ய முடியும். இரண்டாவது, தேவன், "கனியற்ற அந்தகாரக் கிரியைகளோடு ஐக்கியம் கூடாது" என்று நமக்குக் கட்டளை கொடுக்கிறார். வேத வசனங்களில், அந்தகாரம் அல்லது இருள், தேவனுக்கும், அவருடைய சித்தத்திற்கும் எதிரான தீமைக்கு அடையாளமாக அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தேவசித்தத்திற்கு மாறான எந்தக் கிரியையிலும் நாம் பங்கு பெறக் கூடாது.

ஆனால், தேவன் அதோடு நிறுத்தவில்லை. தீமையான காரியங்களில் நாம் பங்கு பெறுவதைத் தவிர்ப்பதைக் காட்டிலும் மேலாக நாம் செயல்படவேண்டுமென்கிறார். அவைகளை கடிந்து கொள்ள வேண்டுமென்று கட்டளையிடுகிறார். சத்தியத்தை சரியாக நாம் பிரகாசித்து அவர்கள் மீது அதைச் செய்ய வேண்டும்.

தேவன் ஏன் இதை நாம் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்? அது அவருடைய விருப்பமாக இருக்கிறது. நாம் பார்த்தது போல, கள்ள உபதேசங்கள் உட்பட கனியற்ற கிரியைகள் ஆத்துமாக்களை அழித்துப்போடும்!

ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய இன்னொரு பொறுப்பு பற்றி நாம் Iதெச 5:21,22-ல் பார்க்கலாம். அவ்வசனங்களில், "தேவன் எல்லாவற்றையும் சோதித்துப்பாருங்கள்" என்று, எனக்கும், உங்களுக்கும் கட்டளை கொடுக்கிறார். எல்லாவற்றையும் சோதித்துப்பார்ப்பதில் நம்முடைய நோக்கம் என்ன? எல்லாவற்றையும் நாம் இரண்டு பிரிவாக பிரித்துப் பார்க்க வேண்டும். தேவன் நல்லது எது என்றும் தீமையானது எது என்றும் நாம் கண்டுபிடிப்பதற்கு அவருடைய வார்த்தைகளை நாம் பயன்படுத்த வேண்டுமென்று விரும்புகிறார்.

இதை நாம் செய்த பிறகு, இந்த இரண்டு வசனங்களில், மேலும் நாம் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் சொல்லுகிறார் என்று கவனியுங்கள். நாம் நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். அதுமாத்திரமல்ல, "பொல்லாங்காய்த் தோன்றுகின்ற

எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" என்கிறார். விலகியிருங்கள் என்பதின் பொருள், ஒன்றிலிருந்து விலகியிருப்பதாகும். ஆகவே, நாம் பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றிலுமிருந்து விலகியிருக்க வேண்டும்.

மாற் 4:24-ல், ஆரோக்கியமான உபதேசம் பற்றி தேவன் எனக்கும், உங்களுக்கும் இன்னொரு பொறுப்பை கொடுக்கிறார். அங்கே, நம்முடைய அன்பான இரட்சகர், நாம் **கேட்கிறதை** கவனிக்க வேண்டும் என்கிறார். கவனியுங்கள் என்ற வார்த்தையின் பொருள் ஜாக்கிரதையாக, உன்னிப்பாக கவனிப்பதாகும். ஆகையால், நாம் கேட்பவைகளைக் குறித்து, வேதாகமம் சம்பந்தமாக ஜனங்கள் போதிப்பவைகள் உட்பட, நாம் ஜாக்கிரதையாக கூர்ந்து கவனிக்க வேண்டும்.

இன்னும் லூக் 8:18-ல் நம்முடைய மீட்பர், கேட்கிற **விதத்தைக்** குறித்து கவனியுங்கள் என்கிறார். அங்கே, இயேசு கேட்கும்போது இருக்கக்கூடிய மனநிலையைக் குறித்து வலியுறுத்துகிறார். நம்முடைய மனநிலை, தேவசித்தத்தை ஏற்றுக்கொள்வதற்கு திறந்த மனதுள்ளதாகவும், அதே நேரத்தில் கவனமும், விழிப்பும் உள்ளதாயிருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, சங்கீதம் 119:104-ல் சங்கீதக்காரனால் எழுதப்பட்டுள்ள வல்லமையான வார்த்தைகளை கவனியுங்கள் அவன் தேவனிடத்தில், "உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன் ஆதலால் எல்லாப் பொய் வழிகளையும் வெறுக்கிறேன்" என்கிறான். தொடர்ந்து வசனம் 128-ல் சொல்லுவதைக் கவனியுங்கள் "எல்லாவற்றைப் பற்றியும், நீர் அருளின எல்லா கட்டளைகளும் செம்மையென்று எண்ணி, சகல பொய் வழிகளையும் வெறுக்கிறேன்."

சங்கீதக்காரன், எனக்கும் உங்களுக்கும் ஓர் அருமையான முன்னுதாரணத்தை வைத்துச் சென்றுள்ளான்! கள்ள உபதேசம் அழியுந் தன்மை கொண்டதாயிருக்கிறபடியால், நாம் எல்லாப் பொய் வழியையும் வெறுக்க வேண்டும். நாம், ஜனங்களை வெறுப்பதில்லை ஆனால், கள்ள உபதேசம் ஆத்துமாக்களைக் கொல்லுவதால், அதை வெறுக்கிறோம்.!

ஆரோக்கியமான உபதேசம் சம்பந்தமாக, ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இருக்க வேண்டிய இன்னொரு பொறுப்பு ரோமர் 16:17ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அங்கே, தேவன், "...... கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும், இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலக வேண்டுமென்று "கட்டளையிடுகிறார்". அப்படிப் பட்டவர்களை நாம் ஜாக்கிரதையாய் கவனிக்க வேண்டும். ஆகவே, புதிய

ஏற்பாட்டு உபதேசத்துக்கு மாறாக, யார் இடறல்களையும் பிரிவினைகளையும், உண்டாக்குகிறார்கள் என்று நாம் கண் வைத்து, விழிப்பாய் கவனிக்க வேண்டும்.

மேலுமாக, அவர்களை விட்டு "விலக" வேண்டுமென்று தேவன் கூறுகிறார். இதன் பொருள், அப்படிப்பட்ட போதகர்களிடமிருந்து நாம் விலகி, ஒதுங்க வேண்டும். இது செய்வதற்கு சிரமமான வேலை, ஆனால், தேவன், இந்த வசனப்பகுதியிலும், புற இடங்களிலும் மிகவும் தெளிவாகக் கூறியுள்ளார்.

உதாரணமாக, IIயோவான் 9-11 வசனப்பகுதியில், தேவன் என்ன சொல்லுகிறார் என்று பாருங்கள், நாம், முன்னமே வசனம் 9-ஐ படித்துள்ளோம். "கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் கிறிஸ்துவை உடையவனல்ல" என்றுள்ளது. ஆகவே, ஒருவன், புதிய ஏற்பாட்டு உபதேசத்திலிருந்து வழிவிலகிப் போக முடிவெடுத்தால், அவன் தேவனிடத்திலிருந்தும், அவருடைய ஆசீர்வாதத்திலிருந்தும் தன்னை விலக்கிக் கொள்ளுகிறான்! இது தேவனுடைய பார்வையில், மிகவும் முக்கியமான ஒன்று என்பது வெளிப்படையானது.

வசனம் 10-ல் கள்ளப் போதகர் சம்பந்தமாக அவர் சொல்லியதிலிருந்து விலகி, தனிப்பட்ட கிறிஸ்தவனுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. கள்ளப் போதகர்கள் சம்பந்தமாக நானும், நீங்களும், நம்மைக் காத்துக் கொள்ள வேண்டும். யாராவது நம்மிடத்தில் வந்து, கிறிஸ்துவின் உபதேசத்தைப் போதிக்காவிட்டால், அங்கே இரண்டு காரியங்கள் செய்யப்பட வேண்டும். முதலாவது, அவர்களை நம்முடைய வீட்டில் ஏற்றுக் கொள்ளக்கூடாது. இரண்டாவது, அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லக்கூடாது.

இங்கே, வாழ்த்துதல் சொல்லக்கூடாது என்பதன் பொருள், நட்பு ரீதியான வாழ்த்து, இது அவர்கள் செய்வதில் வெற்றியும், சுபிட்சமும் பெற விரும்புவதையும் உள்ளடக்கியிருக்கிறது, ஆகவே, தேவன் அவர்கள் ஊக்கம் பெறும்படியோ, கள்ளப் போதகர்களை அங்கீகரிக்கும்படியோ நாம் **எந்தவொரு** செயலையும் செய்யக்கூடாது. அவர்கள் மற்றவர்களுக்குச் செய்யும் வேலை பாராட்டப்படும்படியான எதையும் நாம் செய்யக்கூடாது. இதை மீறுபவர்களுக்கான தண்டனை பற்றிய எச்சரிப்பு வசனம் 11-ல் கொடுக்கப்பட்டுள்ளது. தயவு செய்து, அந்த வசனத்தை வாசித்து, தேவன் என்ன சொல்லுகிறார் என்று சிந்தித்துப்பாருங்கள்.

கள்ளப்போதகர்களுக்கு யார் தங்களது அங்கீகாரத்தைத் தருகிறார்களோ, அவர்கள் அவர்களுடைய, "துர்க்கிரியைகளிலும் பங்கு பெறுகிறார்கள்" என்று தேவன் அறிவிக்கிறார். ஆகையால், கள்ளப்

போதகர்களுக்கு அங்கீகாரம் தருவது, அவர்களுடைய பாவச் செயலில் நாமும் பங்கடைவதாகச் செய்கிறது!. இது **தேவனிடத்திலிருந்து** கொடுக்கப்பட்டுள்ள மிக முக்கியமான கட்டளை, கள்ளப்போதகர்களுக்கு எதிராக, தேவன் எப்பொழுதும் கடுமையான தண்டனையையே வாக்களித்துள்ளார். (உதாரணம் கலா 1:6-9) கள்ளப்போதகர்களுக்கு நாம் ஆதரவு காட்டி ஏதாவதொரு வகையில் அங்கீகாரமளித்தால், அந்தத் தண்டனைக்கு நாம் நம்மைக் கீழ்ப்படுத்துகிறோம் என்று பொருள்! கள்ளப் போதகங்களை தேவன் வெறுக்கிறார் என்பதும், அது ஆத்துமாக்களை அழிக்கக்கூடியதாயிருக்கிறதென்பதும், நமக்கு மிகுந்த பயத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்க வேண்டும்!.

IIதெச 3:14,15,16 ஆகிய வசனப் பகுதியில், எனக்கும், உங்களுக்கும் தேவன் இன்னும் பல பொறுப்புகளைக் கொடுத்துள்ளார். முதலாவது, முதல் நூற்றாண்டுக் காலத்தில் நமக்கு அப்போஸ்தலனாகிய பவுலாலும் மற்ற அப்போஸ்தலர்களாலும் தீர்க்கதரிசிகளாலும், நமக்கு எழுதிக் கொடுக்கப் பட்டவைகளுக்கு மாறாக, "ஒழுங்கற்று" என்பதின் பொருள், "இருக்க வேண்டிய இடத்தில் இல்லாமல்" என்று பொருள், ஆகவே, தேவன் இங்கே ஒருவன் ஏற்றுக்கொண்டு நடக்க வேண்டிய புதிய ஏற்பாட்டிலிருந்து வழிவிலகிப்போவது குறித்துப் பேசுகிறார். அந்த வழிவிலகுதல், கள்ள உபதேசத்தைப் போதிப்பதாகவோ அல்லது தொடர்ந்து பாவத்தில் ஜீவிப்பதாகவோ இருக்கலாம்.

இரண்டாவது, ஒருவன் தேவனுடைய வார்த்தைக்குத் தொடர்ந்து கீழ்ப்படியாமலிருக்கத் தெரிந்து கொண்டால், நாம் அவனைக் குறித்துக் கொண்டு அவனோடு ஐக்கியம் வைத்துக் கொள்ளக்கூடாது. அவன் "வெட்கப்படும்படியாய்" நாம் செய்ய வேண்டுமென்று தேவன் கூறுகிறார். ஒருவன் தன்னுடைய பாவ வாழ்க்கையிலிருந்து மனந்திரும்ப மறுத்தாலோ அல்லது தங்கள் தவறுக்காக வெட்கப்பட்டு, மனந்திரும்பி, கர்த்தருக்கு உண்மையுள்ளவனாக தன்னுடைய கீழ்ப்படிதலைக் காட்ட மறுத்தாலோ, நாம் அவர்களை விட்டு விலக வேண்டுமென்று, தேவன் தெளிவாகவே கட்டளையிடுகிறார்.

அப்படிப்பட்டவர்களை நாம் சத்துருவாக எண்ணாமல், சகோதரர்களாக எண்ணி புத்திச் சொல்லவேண்டும். நம்முடைய நோக்கம், அவனுடைய விலையேறப்பட்ட ஆத்துமாவின் இரட்சிப்பாக இருக்க வேண்டும்.

ஆகையால், ஆரோக்கியமான உபதேசம் சம்பந்தமாகவும், வாழ்வது சம்பந்தமாகவும், தேவன் எனக்கும், உங்களுக்கும் மிக முக்கியமான சில பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறார், என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. நாம் ஒவ்வொருவரும் அந்தப் பொறுப்புகளைக் கீழ்ப்படிதலோடு ஏற்றுக்கொண்டு நம்முடைய கர்த்தருக்காகவும், சக மனிதருக்காகவும் அன்போடு நிறைவேற்றுவோமாக !

**EZSR** **CHARLIE DI PALMA**

# பரமபிதாவின் சித்தத்தின்படி செய்யுங்கள்

பிரியமானவர்களே நமது செய்திக்குரிய வசனப் பகுதி மத்தேயு 7:15 முதல் 23 வரையுள்ள வசனப்பகுதியிலே பொக்கிஷமாக மறைந்திருக்கிறது. தாவீது உம் வேதத்திலுள்ள அதிசயங்களை நான் காணும்படி என் கண்களைத் திறந்தருளும் என்று ஜெபித்தானல்லவா அப்படிப்பட்ட ஜெப சிந்தனையோடு நாம் இந்தச் செய்தியை தியானிப்போம்.

நம் செய்திக்குரிய இந்த ஒன்பது வசனங்களில் நமதாண்டவர் நமக்கு மூன்று மிக முக்கியமான காரியங்களை கற்றுத்தர உள்ளார். 1. எச்சரிப்பு. 2. கண்டிப்பு 3. தேவனின் சித்தம் செய்தல்.

## 1. நமதாண்டவரின் எச்சரிப்பு :

மத் 7:15 - கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாய் இருங்கள் என்கிறார். தொடர்ந்து வரும் வசனப்பகுதிகளில் ஆடுகள் போல வேஷம் தரித்த ஓநாய்கள் என்கிறார். பொதுவாக கள்ளன் - திருடன் என யாரைச் சொல்கிறோம். பிறர் உழைத்து கஷ்டப்பட்டு சம்பாதித்தவைகளை உழைக்காமல் வஞ்சகமாக எடுத்துக்கொள்கிறவர்களையே, ஆம் பிரியமானவர்களே Iயோவான் 4:2-3 வசனப்பகுதியில் மாம்சத்தில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல அவைகள் அந்திக்கிறிஸ்துவின் ஆவி என்று தெரிந்து கொள்ளுங்கள்.

## A. என்ன அறிக்கை செய்ய வேண்டும் :-

அப்போஸ்தலர் 8:37-ல் சொல்லியபடி இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்யவேண்டும். அதில்தான் சுவிசேஷம், தேவமகிமை, இரட்சிப்பு எல்லாம் அடங்கி இருக்கிறது. அன்பானவர்களே உங்கள் வேதத்தில் மத் 3:16,17 வசனங்களுக்கு வாருங்கள். அந்தயோர்தான் நதிக்கரையிலே நாம் காண்பது என்ன? இயேசு, ஞானஸ்நானம் பெற்று கரையிலே நிற்கிறார். தேவ ஆவியானவர் புறாவைப் போல அவர் மேல் இறங்குகிறார். பிதாவானவர் வானத்திலிருந்து இவர் என்நேச குமாரன் இவரில் பிரியமாய் இருக்கிறேன் என சாட்சி கொடுக்கிறார்.

மேலும் Iயோவான் 5:7 மத் 28:19 ஆகிய வசனப்பகுதிகள் தேவத்துவத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்கிற மூன்று நபர்களைக் குறிப்பிடும்போது இன்றும் சிலர் பிதாவும் குமாரனும் பரிசுத்த ஆவியும் ஒருவரே என வாதாடும் மக்களையும், போதிக்கும் போதகர்களையும் குறித்து எச்சரிக்கையுடைவர்களாய் இருங்கள்.

## B நல்லமரம் கெட்ட கனிகளைத்தராது :-

இவர்கள் பேச்சும் போதகமும் பூமிக்குரியவைகளையே மையப்படுத்தி இருக்கும் யோவான் 18:36 தேவனுடைய ராஜ்யம் பரலோகத்திற்குரியது நாமும் பரலோகத்திற்குரியவர்கள். கொலோ 3:1-3 மேலான காரியங்களைத் தேடுவதே நல்லகனிகள் தரும் மரமாகும்.

## 2. கண்டிப்பு : அக்கிரமச் செய்கைகாரரே அகன்று போங்கள்

இந்த வார்த்தைகள் யார் யாரிடம் சொல்லப்பட்டது? நமதாண்டவர் நியாயத்தீர்ப்புநாளில் மத் 7:22-ல் உள்ளபடி இயேசுவின் நாமத்தினாலே (1) தீர்க்கதரிசனம் உரைத்தவர்களையும் (2) பிசாசுகளைத் துரத்தினவர் களையும் (3) அநேக அற்புதங்களைச் செய்தவர்களையும் நோக்கிச் சொல்கிறார். என்னவென்று “அக்கிரமச் செய்கைக்காரர்களே” என்கிறார்.

நியாயத்தீர்ப்பு நாளில் இன்னும் ஒரு சம்பவத்தை பாருங்கள். மத். 25:31-40 வசனங்களில் சீஷர்களுக்கு அநேக நன்மைகள் செய்தவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே ........ ராஜ்ஜியத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள் என்கிறார். இந்த இரண்டு வசனப்பகுதிகளிலும் நாம் கற்றுக்கொண்டது என்ன? மத்தேயு 25ல் வரும் நற்கிரியைகள் தேவன் பிரியப்படுகிற காரியங்கள், மத் 7:22 அற்புதங்கள், பிசாசு துரத்தல் தீர்க்கதரிசனங்கள் உரைத்தல் ஆகியவை “பிதாவின் விருப்பமல்ல” அப்படியென்றால் வேதத்தில் சொல்லப்பட்ட அற்புதங்கள், வரங்கள் பொய்யா? என நீங்கள் கேட்கலாம்.

தயவு செய்து என்னோடு கூட மாற்கு 16:14-20 வசனப்பகுதிகளில் கவனியுங்கள் ஆண்டவர் ....... விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று சொல்லிவிட்டு வச. 17,18-ல் பிசாசுகளை துரத்துதல், புதிய பாஷைகளைப் பேசுதல், சர்ப்பங்களை எடுத்தல், சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது வியாதியஸ்தர்மேல் கைகளை வைத்து சுகமாக்குவார்கள் என்று வாசிக்கிறோம். இதில் ஏதும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது என நம்புகிறேன். இப்பொழுது மாற் 16:14ஐ கவனமாய் வாசியுங்கள்.

அதன்பின்பு பதினொருவரும் போஜன பந்தி இருக்கையில் அவர்களுக்கு அவர் தரிசனமாகி ....... அப்போஸ்தலர்கள் அவரை நம்பாமற் போனதினிமித்தம் தான் இந்த வார்த்தைகளைக் கூறுகிறார்.

மத். 10:1-4ல் அப்போஸ்தலர்கள் எத்தனைபேர் பன்னிரண்டு பேர்களல்லவா? மாற்கு 16:14-ல் அப்போஸ்தலர்கள் பதினொருபேர் இருக்கின்றனர் மீதி ஒருவன் எங்கே? அவன்தான் யூதாஸ் காரியோத்து, இயேசுவை ஆவிக்குரிய கிறிஸ்து என்று விசுவாசியாமல் போய் தற்கொலை செய்து கொண்டான் மத் 27:1-5 இப்போது இயேசு கூறுவது என்ன? அவன் விசுவாசியாமல் போனான் நீங்களும் அப்படி இருக்கவேண்டாமென்று தாம் தெரிந்து கொண்ட தமது அப்போஸ்தலர்களிடம் கூறுகிறார். ஆகவே பிரியமானவர்களே மாற் 16:14-20 வசனப்பகுதிகளில் உள்ள அற்புத செயல்கள் உங்களுக்கும், எனக்கும் உரியதல்ல, அது அப்போஸ்தலர்களுக்கு உரியது. அப்படி இருந்தால் கிறிஸ்து மத் 7:22-ல் வெகுவாகப் பாராட்டி இருப்பார் இப்படி பகிரங்கமாக முகதாட்சண்யமின்றி சாடி இருக்கமாட்டார். ஆகவே இந்த கண்டிப்பைப் புரிந்து கொள்வோம். நமது செய்தியின் மூன்றாவது பகுதியாக தேவசித்தம் என்ன என்பதைப் பார்ப்போம்.

## 3. பிதாவின் சித்தம் செய்வோம் :-

பரமபிதாவின் சித்தப்படி செய்கிறவர்கள், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் என்றால் பிதாவின் சித்தம் என்னவென்று தெரிந்தால் எவ்வளவு எளிதாக இருக்கும். ஆம் பிரியமானவர்களே அவரது கற்பனைகள் பாரமானவைகளல்ல (Iயோ 5:3) மத். 11:29-30 பிதாவின் சித்தம் செய்வதே கிறிஸ்துவின் மூச்சு, பேச்சு, பிரயாசம் எல்லாம் உணவை மறந்து தூக்கத்தை மறந்து கிறிஸ்து பிரயாசப்பட்டதெல்லாம் பிதாவின் சித்தம் செய்யத் தான் அப்படியென்றால் பிலி. 2:5ன் படி கிறிஸ்துவின் சிந்தை நம்மில் இருக்க தேவன் விரும்புகிறார். பிதாவின் சித்தம் என்ன என்பதைப் பார்ப்போம்.

## (A) I தீமோ 2:4 பிதாவின் சித்தம் :-

எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராய் இருக்கிறார். யோவா 8:32 சத்தியம் தான் ஒரு மனிதனை பாவத்திலிருந்து, மூடநம்பிக்கையிலிருந்து, அறியாமையிலிருந்து பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாக்கமுடியும். ஆகவே சத்தியத்தை அறியுங்கள் யோவான் 17:17 உம்முடைய

சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், உம்முடைய வசனமே சத்தியம் இந்த சத்தியத்திற்குரியவர் கிறிஸ்து யோவான் 14:6 அவரே வழி, சத்தியம், ஜீவன், யோவான் 1:4 அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாய் இருந்தது. யோவா 1:9 அந்த ஒளி தன்னிடம் வருகிற எந்த மனுஷனையும் பிரகாசிக்கச் செய்யும். சங். 119:94 நான் உம்முடையவன் என்னை இரட்சியும்; உம்முடைய கட்டளைகளை ஆராய்கிறேன் ஆம் பிரியமானவர்களே அநேகர் யோவான் 5:39 ஆராய்ந்து பார்க்க இவைகளில் நாட்டமின்றி தீத்து 3:9 புத்தியீனமான தர்க்கங்களிலும், முடிவில்லாத வம்ச வரலாறுகளை ஆராய்வதிலும், நியாயப் பிரமாணத்தைக் குறித்த வாக்குவாதங்களைப் பேசுகிறார்கள். இவைகள் அப்பிரயோஜனமானவைகள் இப்படிப்பட்ட வாக்குவாதங்கள் பக்தி விருத்தியை உண்டாக்காது மாறாக Iகொரி 15:33 நம் நல்விசுவாசத்தைக் கெடுத்துவிடும். ஆகவே, எச்சரிப்படையுங்கள்.

## (B) Iதெச 4:3 நீங்கள் பரிசுத்தமடைவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது

நாம் ஏன்? பரிசுத்தமடையவேண்டும் ஏன் என்றால் தேவன் பரிசுத்தராயிருக்கிறார். I பேதுரு 1:15,16 லேவி 19:2, சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர் (ஏசா 6:3) இன்றைக்கு அநேகரின் வாய் எபே 4:29-30படி பரிசுத்த மற்றதாக, அநேகரின் கைகள் பிலி 2:14ன்படி ஜீவ வசனத்தை பிடித்திருக்கிற கைகளில் மனைவியை அடிக்கிறவர்களாகவும், அநேகர் கைகள் பரிதானம் வாங்குகிறகைகளாகவும் இருக்கின்றது. யாத். 23:8, பரிதானம் பார்வையுள்ளவனைக் குருடாக்கி விடும். நீதி. 15:27 பரிதானத்தை வெறுக்கிற பரிசுத்தம் வேண்டும் பிரியமானவர்களே, அநேகரின் கண்களில் பரிசுத்தம் இல்லை மத் 6:22-23 கண்கள் கெட்டதாய் இருக்கிறபடியால் முழுச் சரீரமும் கெட்டு அவஸ்தைப்படுகின்றனர். நீதி. 4:25 உன் கண்கள் நேராய் நோக்கக்கடவது நமதாண்டவரின் கண்கள் உன் 5:12ல் பாலில் கழுவப்பட்ட சுத்தமான கண்களாக இருந்தது. ஆனால் இன்று Iயோவா 2:15-16ன் படி கண்களின் இச்சை உடையவர்களாக அநேகர் இருக்கின்றபடியால் ஏசா 59:1-2ன்படி அவர்களுக்கு வரவேண்டிய தேவ ஆசீர்வாதங்கள் தடைபட்டு கிடக்கின்றது.

I தெச 5:23 சமாதானத்தின் தேவன் நாம், ஆவி, ஆத்துமா, சரீரம், முற்றிலும் பரிசுத்தமடைய வேண்டும் என விரும்புகிறார். நீங்கள் தேவனை தரிசிக்க வேண்டுமா? மத் 5:8- இருதயத்தில் சுத்தமுள்ளவர் களாயிருங்கள். எபி 12:14- பரிசுத்தமின்றி தேவனை உணரமுடியாது.

**(C) யோவா 6:39-40** உங்களை கடைசிநாளில் எழுப்புவதே தேவனுடைய சித்தம். பிரியமானவர்களே குமாரன் எங்கே இருக்கிறார்? அவரது மெய்யான உபதேசம் எங்கே இருக்கிறது? என தேடிப்பார்த்து உங்களை ஒப்புக் கொடுத்து சத்தியத்தின்படியாக ஜீவியுங்கள், நீங்கள் எழுப்பப்படுவீர்கள் அதுவே பிதாவின் சித்தம் தேவனுடைய பார்வையில் நீங்கள் மிக, மிக முக்கியமானவர் மத் 16:26 நீங்கள் பூமியில் சம்பிரமாய் வாழ்ந்து நித்தியத்தில் மீளமுடியாத ஆக்கினையில் சிக்கிக் கொள்வீர்கள் என்றால் எத்தனை பரிதாபம் அது என யோசியுங்கள். பவுலின் ஆலோசனையைக் கேளுங்கள்.

பிலி 3:10-11 எப்படியாயினும் மரித்தோரில் இருந்து உயிரோடெழுந்திருக்க தகுதியாகும்படி அதற்கு தடையாக இருக்கின்ற காரியங்களை படிப்பு, புகழ், செல்வம், அந்தஸ்து, ஜாதி எல்லாவற்றையும் விட்டு கிறிஸ்துவைத் தெரிந்து கொண்டான். அதனால் தான் IIதீமோ 4:8 நீதியின் கிரீடம் தனக்கு வைக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார். பவுல் விட்டுவிட்ட (பிலி. 3:4-8) அநேக காரியங்களில் நம்மில் எத்தனைபேர் கிறிஸ்துவுக்காக விட்டுவிடத் தயாராயிருக்கிறோம்.? நீங்கள் விட்டு விடத் தயாரா? என்றால் உங்கள் விசுவாசம் கிரியையாக மாறட்டும் அந்த நீதியின் கிரீடம் உங்களுக்கும், உரியதாகட்டும். தேவசமாதானம் நம் யாவரோடும் இருப்பதாக. ஆமென்!

**S. பிச்சைமுத்து,**
தூத்துக்குலடி.

**உங்கள் கவனத்திற்கு**

**அதிகத் தரமுள்ள பல வண்ணத் தாள்களைக் கொண்டு நேர்த்தியான அளவுகளில் வடிவமைக்கப்பட்டு. சிறப்பான முறையில் அச்சிடப்பட்டு. எடுப்பான தோற்றம் கொண்ட சுவிசேஷக் கைப்பிரதிகள் உங்கள் உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது. மிகக் குறைந்த விலை தேவைக்கு முந்துங்கள்.**


**தலைப்புகள்**

1. உன்னை நீயே எண்ணிப்பார்
2. கண் இல்லாதவன் கண்டு கொண்டான்
3. மனுக்குலத்துக்கு விமோசனம் உண்டா?
4. இன்றைக்கு நீங்கள் மரிக்க நேர்ந்தால் .....
5. ஞானஸ்நானம்
6. யார் கிறிஸ்தவன்?
7. ஆராதனை
8. சபை என்பது என்ன?

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**


**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**

தபால் பெட்டி எண் -27, காங்கேயம் - 638 701.



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELGU | Monday<br>to Friday | 5.30-5.45. | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45-7.00 p.m.<br>5.45-6.00 p.m.<br>5.30-5.45 p.m. | Box. 8405<br>Bangalore - 560<br>084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45-4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sansrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghese |



Postal Regn. No. TN / WR / ERD / 77 / 2003
Licensed to Post without pre payment
TN / WR / ERD / 03 / WRP / 2003

Registered News Paper
RNI No. 47661 / 87 - New Delhi
Annul Subscription Rs.30/-

# ஏழாம் வேதாகம கருத்தரங்கம்

அக்டோபர் 22. 23 - 2004 காங்கயம் - 638 701.




சகோ. ஏசையன் கருத்துரையாற்றுகிறார்.


**பாடல்களில் வழிநடத்துவோர்**

1. சகோ. K.S. பாலு
2. சகோ. பிக்கின்ஸ்
3. சகோ. ஜார்ஜ் சாலமோன்
4. சகோ. சேகர்
5. சகோ. ஜார்ஜ் வசந்தன்



கருத்தரங்கில் பங்கு பெற்றோரில் ஒரு பகுதி



மற்றுமொரு பகுதி

Published by Church of Christ, Kangayam.
Printed at Konar Printers, Madurai - 625 012. Editor. S. Rajanayagam.